சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1.	பிரமாதீச௵ மாசி௴—1914௵ பிப்ரவரி௴	ஸஞ்சிகை 10. No. 10.

THE INDO-CEYLON ROUTE.

இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும் புதிய ரெயில்வழி.

நிகழ்வருடம் பிப்ரவரி மீ த்தில் இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும்போடப்பட்டிருக்கும் புதிய பாதையைச் சென்னைராஜதானிக் கவர்னரான லார்டு பெண்ட்லாண்டு அவர்கள் அனேகப்பெரிய கனவான்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் மத்தியில் தனுஷ்கோடியில் திறந்தார். ஸிலோன்கவர்னரும் அவரது உத்தியோகஸ்தர்களும் விஜயம்செய்திருந்தார்கள். மற்றுமனேக கனவான்களும் வந்திருந்தார்கள். தென்னிந்தியா ரெயில்வேகம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் நெவில் ப்ரீஸ்ட்லி அவர்கள் இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும் சமுத்திரத்தினடுவே பாலம்போட்டோ அணைகட்டியோ பாதை யேற்படுத்தவேண்டுமென்றும் ஆலோசனை சுமார் முப்பது வருஷங்களுக்குமுன் துவக்கப்பட்டதென்றும், அதற்கு அப்போது போடப்பட்ட திட்டப்பட்டியானது 290 லட்சம் ரூபாயாயிருக்கப் பிறகு அது 249 லட்சமாகக் குறைக்கப்பட்டதென்றும், ஆனாலும் இவ்வளவு அபாரமான தொகையைச் செலவழித்து சமுத்திரத்தில் ஒரேபாலம் போடுவதானால் எப்படியிருக்குமோ என்னவோ வென்ற சர்ச்சை உண்டானதன்மேல் கடலின்மீது ஒரே வாராவதிபோட்டு அதன்மீது இருப்புப்பாதைபோட்டும் ஆரம்பத்தில்கூறிப் பின்னும் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரின் தீர்மானத்தைத் தெளிவாய் எடுத்துச் சொன்னார். பிரயாணிகள் ஸிலோனுக்குப் போகவேண்டுமானால் இப்போது தூத்துக்குடிக்குப்போய் அங்கிருந்து கப்பலில் ஏறிச் செல்லவேண்டியதாயிருந்தது. தபால்களுமப்படியே. இனிமேலென்றால் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் ஒரு கோடி ரூபாய் செலவுசெய்து போட்டிருக்கும் ஏற்பாட்டின்படி மண்டபத்திலிருந்து ராமேசுவரத்திற்கும், ராமேசுவரத்திலிருந்து தனுஷ்கோடிக்கும் போட்மெயில் போய்நிற்கும். இதேமாதிரி ஸிலோனில் வடக்குத் துறைமுகமாயிருப்பது தலைமன்னார். அவ்விடத்தில் ஸிலோன் ரெயில் வந்து நிற்கும். தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் மத்தியில் பாக்ஸ் ஜலசந்தி. அதன் அகலம் இருபத்திரண்டுமைல்தூரம். இந்த இருபத்திரண்டு மைல் தூரத்தையும் கடக்கத் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் மூன்று நீராவி மரக்கலங்களைத் தயார்செய்திருக்கிறார்கள். அவைகளுக்கு

முறையே கர்ஸன், எல்கின், ஹார்டிஞ்சு என்று பெயர். பிரயாணிகள் தனுஷ்கோடிவரையில் ரெயில்வே டிரெயினில்போய்ப் பின்னர், தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாரது ஸ்டீமரில் தம் சாமான்களோடு ஏறி ஸிலோன் தீவின் வடக்குத் துறைமுகமான தலைமன்னார் போய்ச் சேரவேண்டும். ஒருமணி நேரத்திற்குள் இந்த இருபத்திரண்டு மைல்களையும் கடந்து விடலாமென்று சொல்லப்படுகின்றது. இனி தபால்களும் பிரயாணிகளும் தூத்துக்குடி மார்க்கமாய்ப் போகவேண்டிய அவசியமில்லாமல் தனுஷ்கோடியிலிருந்து ஸ்டீமர் ஏறி ஸிலோன் போய்விடுவார்கள். இது ஸிலோனில் உள்ளவர்களுக்கும் இந்திய ஜனங்களுக்கும் நடைபெறக்கூடிய வியாபார விருத்தியைப் பெருக்கடிக்குமென்பதை நாம் சொல்லவேண்டியதனாவசியம். பூர்வம் ஸ்ரீராமபிரான் தம் தேவியான ஸீதாதேவியைத் தேடிச்சென்றபோது ராக்ஷஸனான ராவணன் அத்தேவியை லங்கையிலுள்ள அசோகவனத்தில் சிறைப்பிடித்து வைத்திருக்கிறானென்று அறிந்து தமது வானர ஸைன்யங்களோடு தனுஷ்கோடிக்குவந்து நளன், ஆஞ்சநேயர் முதலான தமது வானரப்பிரப்ருதிகளால் சமுத்திரத்திலணைபோட்டு லங்கையாகிற ஸிலோனுக்குச்சென்றதாக ராமாயணகதையில் நாமெல்லோரும் படிக்கிறோமல்லவா? இவ்விதம் அக்காலத்தில் அணைபோட்டிருந்திருக்குமேயானால் அது தற்போது ரெயில்பாதை சம்பந்த அங்கு செய்யப்பட்டிருக்கும் மராமத்து வேலையிலும் குறைவான வேலைப்பாடு கொண்டதல்லவென்பதை மேற்படி ரெயில்வேயைத் திறந்த மாகாண கவர்னரவர்களும், தென்னிந்திய ரெயில்வே பிரதிநிதியாய் வந்திருந்த மிஸ்டர் வெல்ப்ரிஸ்டியும் எடுத்துச் சந்தோஷமாய்ச் சொன்னார்கள். இனி ஸிலோனுக்கும் இந்தியாவுக்கும் சுலபமான பாதையேற்பட்டு விட்டப்படியினால் பிரயாணிகள் சுகமாய்ப் போவார்கள். வியாபாரமும் பலபலமாய் நடைபெறும். உறுதிமொழிச் சீட்டெழுதிக்கொடுத்துத் தோட்டங்களில்வேலை செய்து வயிறு வளர்ப்பதன் நிமித்தம் கூலியாட்களைத் தேடவேண்டிய ஆவசியகமுமிராது. வேலையாட்கள் தத்தம்மனோபீஷ்டத்தின் பிரகாரம் ரெயிலேறி ஸிலோனுக்குச் சென்று தமது புத்தியுக்திகளுக்கும் சாமர்த்தியத்திற்கும் தகுந்தபடி தொழில்கள்செய்து பணம் சம்பாதிக்கவியலும். தென்னிந்திய ரெயில்வேகம்பெனியாரும் பிரயாணிகளின், முக்கியமாய் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் சௌகரியங்களை உத்தேசித்து சகலவிதமான அனுகூலங்களும் செய்து கொடுப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். மொத்தத்தில் வெகுகாலமாய் ஆலோசனையிலிருந்துவந்த இம்முயற்சி இப்போது கைகூடி நிறைவேற்றப்பட்டதற்கு இந்தியா, ஸிலோன் ஆகிய இவ்விரண்டிலுமுள்ள மகாஜனங்கள் தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாருக்கு மிகக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

PREMIER LIFE STOCK INSURANCE CO. OF INDIA AND BURMA.

பிரிமியர் லைப் ஸ்டாக் இன்ஷூரன்ஸ் கம்பெனி.

சென்னைப்பட்டணம் ஜியார்ஜ்டவுன் மெக்லீன் தெருவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இக்கம்பெனியின் நோக்கம் என்னவென்றால் மனிதர்களுடைய ஆயுளை இன்ஷூரன்ஸ்செய்துகொண்டு மனிதர்கள் இறந்துபோனவுடன் வார்சுக்கு குறிப்பிடப்பட்ட தொகை கொடுத்து வரப்படு

வதுபோல யானை, குதிரை, மாடு முதலிய கால்நடைகளை இன்சூரன்ஸ் செய்துகொண்டு அவைகள் மரணமடையுமானால் இன்சூரன்ஸ செய்துவைத்துக்கொண்டவர்களுக்கு குறிப்பிட்ட தொகைகொடுக்கப்பட்டுவருவதே. இம்மாதிரிகம்பெனிகள் ஐரோப்பாவிலும், இங்கிலாண்டிலுமிருக்கின்றன. கால்நடைகளை வைத்துக்கொண்டு நஷ்டமடையும் பிரபுக்கள், பாரி உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்கள், மடாதிபதிகள், மகந்துக்கள் முதலான பேர்களுக்கு இனி கஷ்டமே கிடையாது.

ஆர்க்காட் கர்நாட்டிக் அவுசைச்சேர்ந்த முககத் அப்தல்காதர் சாயேப் பகதூர், தஞ்சாவூர் ஜில்லா பூண்டிவாண்டையார், ஆனரபில் திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா, மெசர்ஸ மோசஸ் கம்பெனி மிஸ்டர் சீதாராமசெட்டியார் போலொத்த நம்பிகை வைக்கப்படக்கூடிய பாரி பிரபுக்கள் டைரக்ட்டர்களாக விருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. நம்முடைய சென்னை ராஜதானியில் இதற்குமுந்தி இம்மாதிரி கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டதில்லை. ஆனால் இந்தியாவில் வடமேற்கு மாகாணங்கள் இம்மாதிரி கம்பெனிகள் ஏற்பட்டு ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன. சென்ற வருடத்தில் இர்தியாவில்கூடிய கிளச்சேரி கோவாப்பரேட்டிவ் கான்பரன்சில் ஐக்யமுயற்சி இலாக்கா ஸ்பெஷல் டிப்டி கலெக்ட்டராகிய மிஸ்டர் தருமரெங்கராஜா அவர்கள் இம்மாதிரியான கால்நடை இன்ஷ்யூரன்ஸ கம்பெனிகள் செங்கற்பட்டு ஜில்லாவில் ஸ்தாபிக்கப்படவேண்டியதவசியமென்று பிரரேபணை செய்தனர். இக்கம்பெனி சென்னை ராஜதானிக்கு நவீனம் என்று சொல்லக்கூடுமேயொழிய இக்கம்பெனியால் பொதுவில் உலகினருக்கு பெரிய நன்மைகள் உண்டென்பதில் சந்தேகமில்லை. இக்கம்பெனியார் பயிரங்கப் படுத்தியிருக்கும் பிராஸபக்ட்டஸ என்னும் விஞ்ஞாபன விளம்பரத்தில் சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் சி. பி. ராமசாமி அய்யரவர்கள் போலொத்த கனவான்கள் பங்கு எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கால்நடை இன்ஷ்யூரன்ஸ கம்பெனி நம்மாகாண ஜனங்களின் கவனத்தைப் பற்றுமென்று நம்புகிறோம்.

TRADE NOTES.

வியாபாரக் குறிப்புகள்.

Technical Education.

கைத்தொழில் படிப்பு.

———:(*):———

இந்தியாவில் கடந்த ஐந்துவருடங்களுக்குள் கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள் 147 லிருந்து 242க்கு ஏறியிருக்கின்றன. சென்னப்பட்டணத்திலும் வங்காளம், யூனைடெட் பிராவின்ஸஸ் பஞ்சாப் ஆகிய இந்த மாகாணங்களில் ஏதேஷ்டமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 5 வருஷத்திற்குமுந்தி மாணாக்கர்கள் 6820 பேர்கள் தானிருந்தார்கள். இப்போதோ 12064 பேர்கள் இருக்கிறார்கள். 1897-லிருந்த மாணாக்கர்களைவிட இப்போது 11 மடங்கு அதிகமாயிருக்கிறார்கள். 5 வருஷத்திற்குமுந்தி வருடம் ஒன்றுக்கு 5,91,095 ஆக விருந்தது இப்போது ரூ. 11,72,947 ஆக யிருக்கிறது. கவர்ன்மெண்டார் 5 வருடத்திற்குமுந்தி ரூ. 2,12,504 கொடுத்துக்கொண்டுவந்தார்கள். இப்போதோ ரூ. 5,25,506 கொடுத்துக்கொண் வருகிறார்கள். கைத்தொழிலில் உயர்தரபடிப்பு கொடுக்கும்படியான பள்ளிக்கூடம் பெங்களூரிலிருக்கிறது. இதன்பெயர் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ் என்று பெயர், பேர்போன பார்சி வர்த்தகராகிய மிஸ்டர் ஜெ.என். டாடாவால் இது ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் இறந்துபோகிறவரையில் இந்தப்பள்ளிக்கூட ஏற்பாடு பூர்த்தி படவில்லை. வருஷத்திற்கு ரூபா. 1.25.000 வருமானமுள்ள பூமியொன்று நன்கொடை அளித்திருக்கிறார். கவர்ன்மெண்டார் வருஷத்திற்கு ரூ. 87 ஆயிரம் கொடுத்துவருகின்றார்கள். மைசூர் சமஸ்தான கவர்ன்மெண்டார் ஒருபூமி விட்டிருப்பது மன்றி ஆரம்பச் செலவிற்காக 5 லக்ஷ ரூபாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் ஆரம்பச் செலவிற்காக ரூபாய் $2\frac{1}{2}$ லக்ஷம் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். 1911-ம் வருஷம் ஜூலைமாதத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது 17 மாணாக்கர்கள் சேர்ந்தார்கள். எல்லா உயர்தர கைத்தொழில் படிப்பும் போதிக்கப்பட்டு வருவதுடன் ஜெர்மன், பிரஞ்சுஜெர்மன் தேச பத்திரிகைகளை வாசித்துப் பார்க்கும்படியாக அப்பாஷைகளும் போதிக்கப்பட்டு வருகின்றன.

Royal Commission.

ரூயல் கமிஷன்.

இங்கிலாண்டில் கூடி விசாரணை செய்யும்படியாக கடந்த ஏப்பிரல் மாதத்தில் மாக்ஷிமை தங்கிய சக்ரவர்த்தியாரால் நியமிக்கப்பட்ட ரூயல் கமிஷன் விசாரணை செய்துகொண்டு வருகையில் அக்கம்மிட்டிகளின் ஒருமெம்பராகிய மிஸ்டர் ஜேனிஸ்என்பவர் நோயில் விழுந்துவிட்டார். ஆதலால் விசாரணை நிறுத்தப்பட்டிருந்தது. மேற்படி நோயில் விழுந்த மெம்பர் சொஸ்தமடைந்துவிட்டபடியால் மறுபடியும் விசாரணை ஆரம்பிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

Chamber of Commerce Meeting.

வர்த்தக சபை மீட்டிங்.

வங்காள வர்த்தக சபை வருஷாந்திரக்கூட்டம் கூடி புதிய வருடத்திற் உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறது. மெசர்ஸ் மாக்கினன் மெக்கன்ஜி என்பவர்களைச் சேர்ந்த மிஸ்டர் ஆர். ஜி. மான்டீத் பிரசிடெண்டாகவும், மெசர்ஸ் கிரைட் லிடன் வுல்லி அண்டு கோவைச் சேர்ந்த மிஸ்டர் எப். எச். ஸ்டுவேர்ட் வைஸ்பிரசிடெண்டாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

All India Cattle Preserving Society.

சர்வ இந்தியா கால்நடை பாதுகாப்பு சங்கம்.

எல்லா இந்தியா கால் நடை சங்கம் என்று பெயர்கொண்ட ஒருசங்கம் லக்னோவில் ஸ்தாபிக்கப்படப்போகிறதாகவும் இந்த சங்கத்திற்கு மூலதனம் 50 கோடி ரூபாய் என்றும் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 ஆக 10 கோடி பங்காகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கிறதென்றும் பங்கு எடுத்துக்கொண்டவர்கள் பங்குப்பணத்தை பணமாகவாவது அல்லது அதற்குத்தகுந்த பொருளையாவது உடனே செலுத்திவிட வேண்டுமென்றும் இதற்கு மிஸ்டரஸ் ஆனிபிசன்ட் அம்மாள் பிரசிடெண்டு என்றும், இந்த சங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் மூலதனம் 50 கோடி ரூபாய் தேவையாக விருந்தபோதிலும் அவ்வளவு இப்போதே தேவையாக விருக்கமாட்டதென்றும் ஆகிய இந்த விஷயங்களடங்கிய ஒரு விளம்பரம் வெளிவந்திருக்கிறது.

Sir T. Wynne.

சர். T. வோயினி.

இந்தியாவில் ரயில்வே போர்ட் பிரசிடெண்டாக யிருக்கும் சர். டி. வொயின் தம்முடைய உத்தியோகத்தை விட்டு சீமைக்குப் போகப்போகிறார். இவர் ரயில்வே போர்ட் பிரசிடெண்டு ஸ்தானத்தை வகித்து உள்நாட்டு வரத்தகமும் தழைத்தோங்க பல வேலைகள் செய்துவந்தபடியால் வர்த்தகதரப்பார்கள் ஒன்று சேர்ந்து அவர்பால் நன்றி பாராட்டி அவருக்கு மரியாதை காட்டும்படியாக அவருக்கு ஒரு விருந்தளிப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். ஆனரபில் மிஸ்டர் A. M. மான்டீத் ஆனரபில் மிஸ்டர் J. S. ஷாக் முதலான பாரி ஆங்கிலேய வர்த்தக பிரபுக்கள் முதலானவர்கள் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த கமிட்டியார் இந்த விருந்து விஷயமாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்வார்கள்.

Mr. John Harper.

மிஸ்டர் ஜான் ஹார்ப்பர்.

மிஸ்டர் ஜான் ஹார்பர் சென்னையில் இன்ஜினீர் அவுஸ் வைத்திருக்கும் மெசர்ஸ் மார்ஷல் அண்டு சன்ஸ் என்கிற கம்பெனியின் மானேஜர் இந்த கம்பெனியாருக்கு இங்கிலாண்டில் கேபின்ஸ்பரோ என்னும் ஊரில் ஒரு பெரிய அவுஸ் இருக்கிறது. சுமார் 23 வருடத்திற்கு முந்தி கல்கத்தாவில் ஒரு கிளை அவுஸ் ஸ்தாபிக்க கல்கத்தாவிற்கு இவர் அனுப்பப்பட்டார். இவர் கல்கத்தாவில் ஒரு கிளை அவுஸ் ஸதாபிக்க, இவருடைய இன்ஜினீர் ஞானத்திற்கு கல்கத்தாவில் அளவிறந்த வேலைகள் அகப்பட்டன. இந்த கல்கத்தா கிளை விருத்தியானவுடன், சென்னப்பட்டணம் லாகூர், பம்பாய் முதலியவைகளிலும் கிளைகள் ஸதாபித்து கம்பெனியின் வருமானத்தை விருத்திசெய்து கொண்டுவந்தார். இதன் பேரில் இவர் கல்கத்தாவிலேயே காயமாக வாசஞ் செய்யும்படியாக நேரிட்டுவிட்டது. இவர் அதிக புத்திசாலித்தனமுடையவர் ஓயாமலும் சளைக்காமலும் வேலை செய்யும் தேக

வலிவுடையவர். இந்தியாவில் தம்முடைய அவுஷதங்களைப் பரவச் செய்தது மன்றி ஆசியா கண்டத்தில் பலவிடங்களிலும் கிளைகள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்.

Calcutta Motor Transport Co.

கல்கத்தா சத்தமோட்டார் வண்டி கம்பெனி.

கல்கத்தா மோட்டார் டிரான்ஸ்போர்ட் கம்பெனி என்று ஒரு மோட்டார் சத்தவண்டி கம்பெனி கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்படப் போகிறதாக விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாண்டிலும் ஐரோப்பாவிலும் இம்மாதிரி கம்பெனிகள் ஏதேஷ்டமாக ஏற்பட்டிருக்கின்றன. அனேக ஜனங்கள் அவைகளில் பங்கு எடுத்துக்கொண்டு தகுந்த லாபத்தை வருஷா வருஷம் அடைந்துகொண்டு வருகிறார்கள். இந்தியாவிலும் சிற்சில இடங்களில் இம்மாதிரி கம்பெனிகள் ஏற்பட்டு ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன. பிரஸ்தாப கல்கத்தா மோட்டார் டிரான்ஸபோர்ட் கம்பெனிக்கு மெசர்ஸ் ஷார்லிடிரிமரீன், விகடர் மார்ரே, சே. எச் புச்சாளன் போலொத்த பெரிய வர்த்தக நிபுணர்கள் டைரக்டர்களாக விருக்கிறார்கள். இக்கம்பெனியின் கருத்தென்ன வென்றால் ஜனங்களைச் சாமான் மூட்டைகளையும் சத்தத்திற்கு ஏற்றிக்கொண்டுப் போய் விடுவதே. இந்த முயற்சி லாபகரமான முயற்சி என்றும் பணமுடையவர்கள் இக்கம்பெனியில் பங்குஎடுத்துக்கொள்ளலா மென்றும் விளம்பரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

Mr. P. Banerjea.

மிஸ்டர் பி. பனர்ஜியா.

மிஸ்டர் பி. பனர்ஜியா என்பவர் கல்கத்தாவிலிருக்கும் நேஷனல் லைப் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு காரியதரிசியாக விருக்கின்றார். 22 வருஷங்களுக்கு முந்தி கல்கத்தாவிலிருந்த ஒரு இங்கிலீஷ் இன்சூரன்ஸ கம்பெனியில் ஒரு ஏஜண்டாயிருந்தார், அந்தக் காலத்தில் ஆங்கிலேயப் படிப்பு அடைந்தவர்கள்கூட இன்சூரன்ஸ கம்பெனியின் நன்மைகளை அறிய மாட்டார்கள். ஆகவே மிஸடர் பானர்ஜியா புத்திசாதுரியத்தாலும் சளையா உழைப்பாலும் ஷை கம்பெனியில் அனேகர்கள் தங்களுடைய ஆயுளை இன்சூரன்ஸ் செய்யும்படியாகத் தூண்டி லாபத்தைத் தேடிவைத்தார்.

Stree Sathupathi Library.

ஸ்ரீசேதுபதி புத்தகசாலை.

திருவாரூர் கமலாசனிப் பத்திராதிபர் ஸ்ரீமத் டி. பஸ். தியாகராஜ ஞானியார் கீழ் குறிப்பிட்டுள்ள விஞ்ஞாபனப்பத்திரிகையை நமக்கு அனுப்பியிருக்கிறார்.—

இச்சிறை செல்வத் திருவாரூரில் 1913-ம் வருடம் மார்ச்சு மாதம் 15-ந் தேதி ஸ்திரவார தினத்தன்று ஸ்ரீ சேதுபதி புத்தகசாலை யெனப் பெரிய ஒரு புத்தக சாலையைப் பொது ஜனோபகாரமாக, கனம் டிஸ்டிரிக்ட் மூன்சிப், வி. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களைக் கொண்டு, திறப்பித்து நடைபெற்று வருவது தாங்களு மறிந்திருக்கக் கூடுமே? அப் புத்தகசாலைக்கு வரும் மார்ச்சு மாதம் 21, 22-ந் தேதிகளில் முதல் வருஷ மகோத்ஸவம் நடத்துவதாகத் திருவருளை முன்னிட்டுத் தீர்மானித்திருப்பதால், தயைகூர்ந்து மேற்படி புத்தகசாலைக்குத் தங்களா லுதவக்கூடிய புத்தகங்களை யனுப்பியும், பொருளுதவி புரிந்தும் கௌரவம் பாராட்டப் பிரார்த்திக்கிறோம்.

அவ்விரு தினங்களிலும் தஞ்சை டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும், தமிழ்க்கழகத் தலைவரும், மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவருமான அரித்துவார மங்கலம் ஸ்ரீமான் கோபாலசாமி ரேகு

நாத ராஜளியார் அவர்களும், மதுரை ஹைகோர்ட் வக்கீலும் சித்தாந்த தீபிகை பத்திராதிபரும், சிவஞான பாஷியம், சிவஞான சித்தியார் முதலிய அரிய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியருமாகிய, ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை யவர்களும் முறையே அக்கிராசனம் வகித்து நடத்தக் கருணையுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அக்காலங்களில் மகா வித்வ சிரேஷ்டர்களால் அரியபெரிய மகோபந்நியாசங்கள் பாஷாபிவிர்த்தி சம்பந்தமாயும், சைவசமயாபிவிர்த்தி சம்பந்தமாயும் நடைபெறுமாதலால் அங்கு விஜயஞ்செய்து சிரவணானந்தம் பெறவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Divine Pictures.

திருவுருவப் படங்கள்.

சென்னை சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கன் ரோட்டு 94-நெம்பர் மாணிக்கவாசகர் பிரஸ் ப்ரோப்ரைடர் மிஸ்டர் தி. மு. அருணாசல முதலியாரால் தயார் செய்யப்பட்ட 108 சிவலிங்கப்படம் ஒன்றும், 1001 சிவலிங்கப்படம் ஒன்றும், 1008 சிவலிங்கப்படம் ஒன்றும் அதுகளுடன் ஒற்ற பூஜிக்கத்தகுந்த ஸ்ரீ தடாதகை பிராட்டியாரென்னும் மதுரை மீனாக்ஷியம்மை திருவுருவப்படம் ஒன்றும் ஆக படங்கள் நான்கு கிடைக்கப்பெற்றோம். இது ஸ்ரீ பரமேஸ்வரனது திருவருட்சத்தி சிற்சத்தி சொரூபமே மகாமேன்மை தங்கிய 64 சத்தி பீடங்களுள் விளங்குவதி லொன்றாகிய திருவாலவாயென்னும் மதுரைமாநகரில் மலயத்துவஜபாண்டியன் மகளாய் திருவவதாரம்செய்த ஸ்ரீ தடாதகைப் பிராட்டியாரை உபாசனாமூர்த்தமெனக்கொண்டு வழிபடுவோர் பலரும் வழிபட்டுய்வான் விரும்பியவர்கள், இதற்குமுன் மேற்படியாரால் வெளியிட்டிருக்கும் அஷ்டோத்தர ஸஹஸ்ர லிங்கமென்னும் 1008 சிவலிங்கமமைந்த ஏகலிங்க படத்தோடுவைத்து ஆராதிக்க மேற்படி தடாதகைப் பிராட்டியார் திருவுருவப்படம் வெகு அழகாகத் தயார்செய்யப்பட்டிருக்கிறது. இது 22 அங்குல நீளமும் 18 அங்குல அகலமுமுள்ளது. இது உயர்ந்த பளபளப்புள்ள கிளேஸ் கடிதத்தில் ஓர் அரிய உருவமாக பதிப்பிக்கப்பட்டு சுலப விலைக்கு விற்கப்படுகிறது. இத் திருவுருவமானது வேதாகமோக்தமாய்ப் பார்ப்பவர்களின் மனதில் உடனே பக்தியை யுண்டாக்கக் கூடியதாகவிருக்கும். இதனை ஒவ்வொருவரும் வாங்கிவைப்பது வெகு முக்கியமாகும். மதுரை மீனாக்ஷி திருவுருவம் சாதாபடம் 1-க்கு விலை அணா 4 மேற்படி முழுமையும் வர்ணம் வைத்தது அணா 12. 108, 1001, 1008. தனித்தனி சிவலிங்கப்படம் சாதா அணா 2. மேற்படி வர்ணம்வைத்தது அணா 4 மேற்கண்ட விலாசதாருக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

H. H. Prince of Wales.

வேல்ஸ் இளவரசர்.

கனந்தங்கிய வேல்ஸ் இளவரசர் அவர்கள் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் குடியேற்ற நாடுகளில் சுற்றுப்பிரயாணஞ்செய்ய உத்தேசங்கொண்டு இங்கிலாண்டிலிருக்கும் கலோனியல் ஆபிசாரை ஒரு புரோகிராம் தயார்செய்ய உத்திரவு செய்ததாக இங்கிலாண்டில் ஒருவதந்தி உலாவிக்கொண்டிருந்தது. இந்தவதந்தி ஆதாரமற்றதென்று பிரசுரப்படுத்தும்படி ருட்டர் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார்.

Assistant Secretary of India.

இந்தியாவின் உதவி காரியதரிசி.

இந்தியாவின் உதவி மந்திரியாகிய மிஸ்டர் லேயனல் அப்ராகாம் சென்ற ஜனவரிமாதத்தில் இங்கிலாண்டிலிருந்து டில்லிக்கு வந்திருந்தார்.

நிகழ் மீ 7உ மின்லோ என்னும் ஸ்டீமரில் ஏறி இங்கிலாண்டிற்குப் போய்விட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டின் ஆலோசனையிலிருக்கும் சில புதிய இருப்புப்பாதைகளைப் பற்றியும் அவைகளுக்கு மூலதனம் சப்ளை செய்வதைப்பற்றியுமான ஏற்பாடுகளைக்குறித்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியமந்திரி ஆபீசுக்கும் கடிதப் போக்குவரத்து செய்வதால் காரியங்கள் முடியமாட்டாதென்றும் நேரில்போய் இந்தியா கவர்ன்மெண்டாருடன் கலந்து பேசினால்தான் காரியங்கள் நிறைவேறுமென்று இந்தியா மந்திரியவர்கள் இவரை அனுப்ப இவர் இரண்டுவாரங்கள்வரையில் டில்லியிலிருந்து சமாசாரங்களை நேரில் அறிந்துகொண்டு திரும்பிப்போய்விட்டார் என்று சொல்லப்படுகிறது.

Finance Commission Report.

நாணய கமிஷன் ரிப்போர்ட்.

இந்தியாவின் நாணய கமிஷன் ரிப்போர்ட் தயாராகி நிகழ் மீ 24உ கையெழுத்து செய்யப்பட்டது. இந்த கமிஷன் விசாரணைகாலத்தில் மாக்ஷிமை தங்கிய மகாராஜாவால் நியமிக்கப்பட்ட மெம்பர்கள் எல்லோரும் ஆஜராகவில்லை ஆதலால அந்த ரிப்போர்ட்டின்பேரில் எவ்வளவு மதிப்பும் வைக்கப்படவேண்டுமோ அவ்வளவு மதிப்பும் வைக்கவிடமில்லை என்று இந்தியபத்திரிகைகள் சொல்லும்கக்ஷி ஆதாரமற்றதென்றும், இரண்டொரு மெம்பர்கள் விசாரணைகாலங்களில் நோயாயிருந்து ஆஜராகவில்லை என்பது வாஸ்தவமாயினும் விசாரணைவிஷயங்கள் அறிவிக்கப்பட்டுக்கொண் டிருந்தனவென்று பயிரங்கப் படுத்தும்படி ரூட்டர் தந்தி கம்பெனியார் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

Sir Alfred Hopkinson.

சர் ஆல்பிரல் ஆப்கின்சன்.

சர் ஆல்பிரட் ஆப்கின்சன் என்பவர் மான்செஸ்டர் சர்வ கலாசாலையில் புரபோசராகவும் வைஸ்சான்சலராகவு மிருக்கப்பட்டவர். இவர் பம்பாய் சர்வ கலாசாலைக்கு ஏதோ யோஜனை சொல்ல பிறப்பட்டுவந்தார். ஒருக்கால் பம்பாயில் ஏற்பட்டிருக்கும் வர்த்தக கலாசாலை விஷயமாக யோஜனைசொல்ல வந்திருக்கக்கூடும். எப்படியிருந்தாலும் சரி, அவர் வந்தநாள்முதல் நோயாயிருக்கின்றனர் என்று கேள்விப்பட்டு அனுதாபப்படுகிறோம்.

THE MADRAS HIGH COURT JUDGESHIP.

ஐக்கோர்ட்டு ஜட்ஜு ஸ்தானம்.

மதிராஸ் ஐக்கோர்ட்டில் காலியாயிருந்த ஜட்ஜு ஸ்தானத்தில் கனம் மிஸ்டர் டி. வி. சேஷகிரி ஐயரவர்கள் இரண்டு வருஷ காலத்துக்கு டெம்பரெரி ஜட்ஜாக நியமிக்கப்பட்டாரென்று கேட்க மிகவும் சந்தோஷிக்கின்றோம். ராஜதானியிலுள்ள உன்னத நியாயஸ்தலத்திலே ஐயரவர்களுக்குக் கிடைத்த ஜட்ஜு ஸ்தானத்தில் அவர் நிகழ் மீ 11உ அமர்ந்தார். மதிராஸ் ஐக்கோர்ட்டில் பிராக்டிஸ் செய்யும் ஸீனியர் வக்கில்களுக்குள் நமது சேஷகிரி அய்யரும் ஒருவர். எனவே வக்கில் வேலையில் அவருக்கு மிக்க திறமையும் தீர்க்க அனுபவமும் உண்டு. பொதுஜன க்ஷேமத்தைக் கோரின தேசிய முயற்சிகளில் அவர் விசேஷ ஊக்கமும் அக்கரையும் எடுத்து உழைத்து வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம். இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மாகாண கான்பரன்ஸ இவைகளில் இவ்விராஜதானியைப் பொறுத்தமட்டில் அவர் காட்டியுள்ள சிரத்தை

மிகவும் புகழத் தகுந்ததே. இதன்றிச் சென்னைச் சட்ட நிருபன சபையிலே மதிராஸ் யூனிவர்ஸிடியின் பிரதிநிதியாய் அய்யரவர்கள் அமர்ந்திருந்து, ஸபையில் ஆலோசனைக்கு வரும் கல்வி சம்மதமான ஒவ்வொரு விஷயத்திலும் ஜனங்களுடைய அபிப்பிராயம் இத்தன்மைய தென்பதையும் அவர்களுடைய அபிலாஷை யின்னதென்பதையும் விரிவாய் எடுத்துக்கூறி இந்தியர்களின் நன்மையைக் குறித்து வாதாடியிருக்கிறார். தாம் பிரவேசிக்குங் காரியங்களில் எல்லாம் தம்மனோதைரியத்தையும் முன் ஆலோசனையையும் மிகுந்த தீவிரபுத்தியுடன் வகித்து அவர் நிறைவேற்றியது சாலவும் சிலாகிக்கத்தக்கது.

மிஸடர் சேஷகிரி ஐயரவர்கள் 1885-ம் வருஷத்தில பி. எல். பரீக்ஷையில் தேறிப்பட்டம் பெற்ற பிற்பாடு சட்ட வியவகாரங்களில் நிபுணத்துவம் வாய்ந்த பாரிஸடரான மிஸடர் எல்டர்லி நார்ட்டன் என்பவரிடத்தில் அப்ரெண்ஸாயிருந்து 1886-ம் வருஷத்தில் ஐக்கோர்ட்டு வக்கிலாயயர்ந்தார். கட்சிக்காரர்களுடைய மனங்கோணாமல் அவர்களை ஸுமுகத்துடன் அழைத்து அவர்களுடைய கேசுகளை அவசரமின்றி நிதானமாய்க் கேட்டு நியாயஸ்தலத்தில் எடுத்துப் பேசுவதோடு அனேக சந்தர்ப்பங்களில் அதிக சிக்கல்களான கேசுகளையும் 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் சுளுவாய் விளங்கவைத்து வாதித்திருப்பது அவருடைய உத்தம குணத்தை விளக்குகின்றது. அய்யரவர்கள் அனேக வருஷகாலம் மதிராஸ லாகாலேஜு என்கிற சட்ட காலேஜில் போதகா சிரியராயு மிருந்தார். அக்காலத்தில் அய்யரவர்களைப் புகழ்ந்து பேசாத மாணவரைக் காண்பதரிது. 1903ம் வருஷத்தில் சென்னையிற்கூடிய இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ மகாசபைக் காரியதரிசிகளுள் அமரும் ஒருவராய் அமர்ந்திருந்ததோடு 1912-ம் வருஷத்தில் குடந்தையம்பதி யென்னும் கும்பகோணம் க்ஷேத்திரத்தில் கூட்டப்பெற்ற மதிராஸ ப்ரொவின்ஷியல் கான்பரென்ஸின் தலைமையாயிருந்தும் நடத்தினார்.

ஸ்ரீமான் பி. ஆர். சுந்தரய்யர் அவர்கள் இறந்துபோன தன் காரணமாக சென்னை ஐக்கோர்ட்டில் காலியாய் விழுந்த ஜட்ஜு ஸதானத்தில் நீண்ட பரிசிலனையும் விஷய வாராய்ச்சியும், தீர்ந்த அனுபவமும் கொண்ட வக்கீல்களுள் ஒருவரான கனம் டி. வி. சேஷகிரி அய்யரவர்களைக் கவான்மெண்டாரவர்கள் தெரிந்தெடுத்து அமர்த்தியது அய்யரவர்களின் பாக்கியமாயிருப்பதுடன் கூட இந்தியர் எல்லோருக்கும் இந்நியமனம் அத்தியந்த மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

A Profit of £. 1,20,000.

1,20,000 பவுன் லாபம்.

அமெரிக்காவிலிருக்கும் நியூயார்க் மாகாணத்தி லிருக்கும்படியான லோயப் அண்டு கோவும், ரீட் அண்டு கோவும் ஆகிய இரண்டு லாவாதேவி செய்யும் பாங்கிக்காரர்கள் இரண்டு மணிநேரத்திற்குள் லக்ஷத்து 20 ஆயிரம் பவுன் அசல் லாபம் சம்பாதித்திருக்கிறார்கள். நியூயார்க் கவர்ன்மெண்டார் ஒரு கோடியே இரண்டு லக்ஷம் பவுன் பொருமானமுள்ள சர்க்கார் பத்திரங்கள்ஏலம்போட்டார்கள். இரண்டு பாங்குகளும் ஒரு கக்ஷியாகச் சேர்ந்துகொண்டு மற்றவர்களை ஏலம் கேட்க விடாமல் தாங்களே ஏலத்தில் கேட்டு குறைந்த விலைக்கு வாங்கிப் போட்டார்கள். மறுநாள் அதை விற்பனைசெய்ய லக்ஷத்து இருபதினாயிரம் பவுன் லாபம் கிடைத்தது. ஏலம் எடுக்கப்பட்ட எல்லா சர்க்கார் பத்திரங்களும் விற்றுப்போய்விட்டன.

The Madras High Court.

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டில் வியாஜ்ஜிய விசாரணை வேலைகள் நாளுக்குநாள் அநுமார் வால் வளர்ந்ததுபோல் வளர்ந்துகொண்டிருக்கிறபடியால் இப்போதிருக்கும் 10ஜட்ஜிகளுடன் இன்னும் இரண்டு பேர்கள் நியமிக்கப் படும்படியாக லோக்கல் கவர்ன்மெண்டார் இந்தியா மந்திரிக்கும் இந்தியா கவர்ன்மெண்டிற்கும் எழுதப் போகிறார்கள்.

Gold to India.

இந்தியாவிற்குப் பொன்.

145,460 பவுன் பெறுமானமுள்ள பொன் "பெர்ஷியா" என்று பெயர்கொண்ட ஸ்டீமர் மூலியமாக இங்கிலாண்டிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கிறது.

---:o:---

Some New Enterprises.

சில புதிய முயற்சிகள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் இரண்டு புதிய பாங்குகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று ரூஜாஷாகி பீபில்ஸ்பாங் இதற்கு மூலதனம் ரூபாய் 20 ஆயிரம். இரண்டாவது மீரட் நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஹீரா புலியன் பாங். சிற்க சில கம்பெனிகளும் நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தர்ம பாசா லோன் கம்பேனி ஒன்று ரூ. ஆயிரம் முதலுடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா அண்டு கலோனியல் இன்வெஸ்ட் மெண்டு கம்பெனி என்று ஒரு கம்பெனி ரூ 4 லக்ஷத்து 50 ஆயிரம் ரூபாயுடன் டில்லி நகரில் வெளி வந்திருக்கிறது. சென்னப்பட்டணம் கொள்ளத்தூரில் ரூபாய் 19 ஆயிரம் மூலதனத்துடன் ஒரு கம்பெனி லாவாதேவி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

Credit Bank.

கிரடிட் பாங்கி.

கிரிடிட் பாங் பம்பாயிலிருக்கிறதென்றும் அது முறிந்துபோய்விட்டதென்று முன் ஒரு சமயம் நம்முடைய சென்னை வியாபாரியில் எடுத்துச் சொல்லியிருந்தோம். இந்த பாங்கியின் மானேஜர் மிஸ்டர் ஜாபர் நம்பிக்கை மோசக் குற்றத்திற்காகவும் ஏமாற்றின குற்றத்திற்காகவும் சார்ஜ் செய்யப்பட்டிருந்தார். இந்தக்கேஸ் பம்பாய் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நடந்து வருகின்றது. கடந்த வாரப் பப்ளிக் பிராசிக்கியூட்டர் ஆஜராகி ஏமாற்றின குற்றத்தை வாபீஸ் பெற்றுக்கொண்டார். நம்பிக்கை மோசக்கேஸ் நடந்து வருகின்றது.

Purchase of Silver.

இந்தியா வாங்கியிருக்கும் வெள்ளி.

ரூபாய் நாணயமடிக்கும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டு இங்கிலாண்டில் கடந்த வருடம் 55 லக்ஷம் பொருமானமுள்ள வெள்ளி வாங்கியிருக்கிறது. இந்தத் தொகையில் 10 லக்ஷம் பொருமானமுள்ள வெள்ளி ஏற்கனவே ஜனவரியில் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது. 1912 ம வருடத்தில் 0 லக்ஷம் பவுன் மதிப்புள்ள வெள்ளி வாங்கியிருக்கிறது 1912-13 ஏற்றுமதி மிதமாக விருந்தகாலத்தில் 70 லக்ஷம் பொருமானமுள்ள வெள்ளி வாங்கியிருக்கிறது. சென்ற வருடம் பயிர்கள் சுபிக்ஷமாக விருந்ததை முன்னிட்டு 45 லக்ஷம் லக்ஷம் பவுனுக்கு வாங்கியிருக்கிறது. இப்படி வாங்கப்பட்ட வெள்ளியெல்லாம் இந்தியாவிற்குப் போய்ச் சேர்ந்து விட்டன. இப்போது அந்த வெள்ளி ரூபாயாய் அடிக்கப்படுகின்றன. ஆகவே பத்துகோடி ரூபாய் நாணயம் அடிக்கப்பட்டு வருகிறது.

Bank Frauds in Japan.

ஜப்பானில் பாங்கி மோசங்கள்.

ஜப்பான் தேசத்திலுள்ள பார்மோசாபாங்கின் நான்கு டைரெக்டர்களும் போர்ஜரிசெய்ததாகவும் பாங்கியைச் சேர்ந்த 10 லக்ஷம் "என்னை" கையாடினதாக குற்றஞ்சாட்டப்பட்டு டோக்கியோ ஜில்லாக் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு 3 வருடம் 6 மாத முதல் 10 மாதங்கள் வரையில் நான்கு பேர்களுக்கும் பலவிதமாக கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் தண்டனை ஊர்ச்சிதப்படுத்தவில்லை. இந்த மோசடியால் பாங்கியை நம்பிக் கையிலிருந்த பொருளை எல்லாம் பாங்கியில் போட்டு மோசமடைந்து நசித்துப் போய்விட்டார்கள். கல்கத்தாவிலிருக்கும் மெசர்ஸ் வீலர் அண்டு கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் வீலர் பழைய தையல் மெஷினை புதிய தையல் மிஷின் என்று சொல்லி ஜப்பானில் புறட்டு சொல்லி பணம் சேகரித்ததற்காக ஜப்பான் கோர்ட்டார்கள் 3 வருடம் கடினகாவல் விதித்திருக்கையில் போர்ஜரி குற்றத்திற்கும் 3 வருடம் கடினகாவல் விதித்திருப்பது போர்ஜரி குற்றத்தை ஜப்பானியர்கள் சாமானியமாக நினைத்திருக்கிறார்கள் என்று விளங்குகின்றது.

Duke of Monte Pensier.

மாண்டி பென்ஷியர் கோமகன்.

மாண்டி பென்ஷியர் கோமகன் இப்போது பம்பாயில் வேட்டையாடி வருகிறார். இவர் உலகமுழுதிலும் வேட்டையாடி வரும் உத்தேசத்துடன் "மிக்கால்" என்கிற உல்லாசக்கப்பலில் புறப்பட்டிருக்கிறார். ஆல்பினியா தேசாபிமானிகள் இவரை பேட்டிக்கண்டு தங்களுடைய தேசத்தின் கிரீடத்தை தரித்துக்கொள்ள வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள். இவர் உல்லாசக்கப்பலில் வரும்போது அட்ரியாடிக் சமுத்திரத்திலிறங்கி ஆல்பெனியாவுக்குச் சென்றார். ராஜமரியாதைகளுடன் ஜனங்கள் ஆரவாரித்து வரவேற்று உபசரித்தார்கள். இப்படியிருந்தும் தாம் அந்த கிரீடத்தை அங்கீகரித்துக் கொள்ளுவதால் ஆல்பேனியா நகரத்தார்களும், வேல்ஸ் இராஜகுமாரனும் மோதிக்கொள்ளுவார்கள் என்றும், இந்த இருதரப்பாரைம் சச்சரவு செய்துகொள்ளச் செய்யும் கிரீடம் தம்முடைய மனதைக் கவரமாட்டாதென்று சொல்லி கிரீடத்தை அங்கீகரித்துக் கொள்ளவில்லை.

A Danish Steamer Sunk.

ஒரு டேனிஷ் ஸ்டீமர் முழுகிப்போய்விட்டது.

"எட்டிரிபாக்" என்கிற டேனிஷ் ஸ்டீமர் பிஸ்கே கடலில் முழுகிப்போய்விட்டதென்று சுல்த்தான் மாண்டுபோய் விட்டாரென்றும் ஒரு பிரயாணியும் 10 ஸ்டீமர் சிப்பந்திகளும் தப்பிக்கொண்டார்கள் என்றும் மற்றவைகள் சேதப்பட்டு போய்விட்டனவென்று வொயிடன்பல் ஸ்டீமரிலிருந்து பர்மாவிற்கு தந்திகம்பியில்லாத் தந்தி சமாசாரம் எட்டியிருக்கிறது.

South African Deportees.

தென் ஆப்பிரிக்கா தேசப்பிரகஷ்டர்கள்.

தென் ஆபிரிக்காவில் ரயில் சுரங்க வேலைக்காரர்கள் செய்த குழப்பத்தில் மேற்படி வேலைக்கார கக்ஷியின் தலைவர்களை யூனியன் கவர்ன்மெண்டார் கைதிசெய்து தேசப்பிரஷ்டை செய்து "உமேஜனி" என்னும ஸ்டீமரில் ஏற்றி இங்கிலாண்டிற்கு அனுப்பிவிட்டார்கள். இந்த ஸ்டீமர் நிகழ் மாதம் 24-ந்தேதி இங்கிலாண்டிற்கு வந்து சேர்ந்தது. வேலைக்கார கக்ஷியைச் சேர்ந்த பார்லிமெண்டு மெம்பராகிய மிஸ்டர் எண்டர்சன் அவர்களை எதிர்கொண்டு அழைத்துவர ஸ்டீமருக்கு சென்றார். ஆரம்பத்தி-

அவர் ஸ்டீமருக்கு விடப்படாமற் போனபோதிலும் சிறிது நேரம்சென்று விடப்பட்டார். நீண்ட நாழிகை பரியந்தம் தேசப்பிரஷ்டை செய்யப்பட்டவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். தேசப்பிரஷ்டை செய்யப்பட்டவர்கள் தாங்கள் திரும்ப தென் ஆபிரிகாவிலிருக்கும் ஒவ்வொரு பிரிடிஷ் பிரஜையும் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட பாத்தியதை உடையவன் என்றும் தென் ஆபிரிக்கா யூனியன் கவர்ன்மெண்டார் தென் ஆபிரிக்காவில் போயர் குடியேற்ற நாடாகச் செய்துபோட எண்ணங்கொண்டிருக்கிறார்கள் என்றும் இந்த எண்ணம் நிறைவேறுமலிருக்கும்படி பிரிடிஷ் பிரஜைகள் ஒன்றுசேர்ந்து தங்களுடைய விஷயத்தை பார்லிமெண்டாருடைய கவனத்திற்குக் கொடுண்வந்து தாங்களுக்கும் தென்ஆபிரிகாவுக்கும நியாயம் செய்யும்படி முயலவேண்டுமென்று நீண்ட விஞ்ஞாபனஞ் செய்துகொண்டார்கள். இதன்பேரில் மிஸ்டர் எண்டார்சன் அவர்களுக்குச் சொல்லவேண்டிய சமாதானங்கள் எல்லாம் சொல்லி அழைத்துக்கொண்டு லண்டனுக்குப் போயிருக்கிறார்.

MADRAS MARKET REPORT.

சென்னை மார்க்கட் ரிப்போட்டுகள்.

25—2—1914,

Piece goods.

சீமை ஜவுளி.

உள்ளூர்மார்கட்டில் வியாபாரம் மந்தம். கொஞ்சம் மெதுவாயிருக்கிறது. சலவை மல்தினுசுகள் ஸ்டாக் ஜாஸ்தி. பஜாரில் விலைகள் நாளுக்குநாள் பீசின்பேரில் ஒரு அணா அல்லது இரண்டணா குறைந்து கொண்டு வருகிறது. வியாபாரிகள், மல், காரிகம்மல், ஜாஸ்தியாய் இண்டெண்டு செய்திருக்கிறார்கள். இவ்விடத்தில் ஸ்டாக்கு அதிகமாயிருப்பதாலும் பணக் கசாலாவாக விருப்பதாலும் வியாபாரம் குறைவாகவிருக்கிறபடியாலும் வியாபாரிகள் ஒருவருக்கொருவர் அசல் கம்மியாய் விற்பனைசெய்து வருகிறார்கள்.

Number Mulls.

நம்பர்மல்கள் 1703 நே. வகையறாலி ஆபீஸ்:

பஜாரில் எப்போதும் மாதத்திற்கு 150 பெட்டிகளுக்கும் குறையாமல் செலவாய்வரும். அப்படியிருக்க இப்போது மாதம் 30 அல்லது 40 பெட்டிகள்கூட செலவாவது துர்லபமாயிருக்கிறது.

Grey Dhoties

காரிகம் தோவத்திகள்.

பஜாரில் சீமை ரகங்கள் சாக்கு குறைவாயிருக்கிறது. விலைவாசிகள் ஜாஸ்தியாயிருக்கிறபடியால் மில் ரகங்கள் அதிகமாய்ச் செலவாகிவருகின்றன. மில் ரகங்கள் அதிகமாய் பஜாருக்கு வந்துகொண்டிருக்கின்றன. சீமை தினுசுகளின் விலைகள் குறையும் பக்ஷத்தில் மில் ரகங்கள் பஜாரில் எடுபடாது. தற்கால விலை:—

ரூ.அ.ப.

$5\frac{3}{4}$ கெஜம் மடி நெ. 138மில்குண்டனஸ் 0-1-5-$\frac{3}{4}$

$5\frac{3}{4}$ கெஜம் ,, 123காஞ்சிபுரம்பேட் - $13\frac{1}{2}$

$5\frac{3}{4}$ கெஜம் ,, 33 ,, 1- 4-3

சீமை. பியர்ட்சல் அண்டு கோ பேட் 114

$5\frac{3}{4}$ கெஜம் 1- 5-0

ஷை குண்டனஸ் 780 $5\frac{3}{4}$,, 1- 1-6

ஷை பொந்து 730 $5\frac{3}{4}$,, 1- 3-9

ஷை ,, 212 $5\frac{3}{4}$,, 1- 3-9

சீட்டிகள்.

கையிருப்பு அதிகமாயில்லை சுமாராயிருக்கிறது.

1 கெஜம் மகமல் சீட்டி ரூ. 4-2 முதல் ரூ. -10

1 கெஜம் பிரன்ச் சீட்டி ரூ. 4-5 முதல் ரூ. 4- 9

$\frac{5}{8}$ கெஜம் ,, 30 கெஜம் ரூ. 3-8 முதல் ரூ. 3-11

20 ,, தோம்பு சின்னடி ,, 4-6 ,, ,, 4-14

20 ,, ஆர்தார் சின்னடி ,, 3-11 ,, ,, 3-13

சிகப்பு தோம்பு.

$1\frac{1}{8}$ கெஜ அகலம் 40 கெஜம் மட்டம் ரூ. 4-14 ரூ. 5-6

$1\frac{1}{4}$ கெஜ அகலம் 40 கெஜம் உயர்ந்தது ,, 7- 8 ரூ. 8-4, ரூ. 9. வரை

$1\frac{3}{16}$,, 25 ,, ரூ. 5. ரூ. 5-8 ரூ 6.

சேலை.

$7\frac{1}{2}$ கெஜம், 8 கெஜம், 9 கெஜம் சாக்கிலட் ரூ. 2-4, ரூ. 2-6, ரூ 2-10.

$7\frac{1}{2}$ கெஜம், 8 கெஜம், 9 கெஜம் மகமல் ரூ. 2-6, ரூ. 2-8, ரூ. 2-12,

$7\frac{1}{2}$ கெஜம் 2-ம் நெ. 1-ம் நெ. தண்டராஸ் ரூ. 2-6, ரூ. 2-10.

கல்கத்தா சீமை ஜவுளி மார்க்கட்.

சென்ற வாரத்தில் மார்க்கட்டில் உற்சாகமேயில்லை. இன்னும் சிலகாலம் அப்படியே யிருக்குமென்று எண்ணப்படுகிறது. கடந்த ஜனவரில் 1913 ஜனவரிமாதத்தைப் பார்க்கிலும் 12 ஆயிரம் மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சமயத்தில் இறக்குமதி கம்மியாயிருப்பது விரும்பப்படக்கூடியது. ஏறக்குறைய இந்தவருடம் முழுதிலுமே இறக்குமதி கம்மியாக விருக்கும் போலிருக்கிறது. பருவகாலம் சுபீக்ஷமாக யிருக்கும்பக்ஷத்தில் வருஷகடைசியில் நல்லமாறுதல்கள் உண்டாகக்கூடும். அதற்குள்ளாக தற்காலமிருக்கும் கனத்தகையிருப்பும் கரைந்துபோகும். எப்படியிருந்தாலும் ஆகஸ்ட் செப்டம்பர்மாதத்திற்குமுந்தி மார்க்கட்டிலும் உற்சாகமும் சுறுசுறுப்பு தோன்ற முகாந்திரமில்லை. கிரேஷர்ட்டிங் விலை இறங்கவில்லை.

SUNDRIES.

பலசரக்குகள்.

Chillies.

மிளகாய்.

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. இதுதான் பருவகாலம். குன்ட்டூர், பெஜவாடாவிலிருந்து புதிய மிளகாய் வந்து கொண்டிருக்கிறது ரொங்கூன், சிங்கப்பூர், பினங் ஏற்றுமதிக்காக உள்ளூரில் உபாயபேரம் நடந்துகொண்டு வருகிறது. புதிய பரிமிளகாய் மார்ச்சுமீ எதிர்பார்க்கப் படுகிறது காளது தேதி விலை:—குன்ட்டூர் பெஜ

வாடா புதுமிளகாய் கண்டி ஒன்றுக்கு வராகன் $13\frac{3}{4}$

பழய மிளகாய்	ஷை வராகன் 7 முதல் 10
பரிமிளகாய்	,, வராகன் 13 முதல் 17

Coriander.

கொத்தமல்லி.

24—2—1914.

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய விடங்களுக்கு ஏற்றுமதியில்லை. சென்ற வருஷத்தைவிட இவ் வருஷ மாசூல் கம்மி. கையிருப்பு சரக்கில்லை கிராக்கிக்குப் போதுமான சரக்குமட்டிலும் வந்துகொண்டிருக்கிறது. நாளது தேதி விலை.—புதிய சரக்கு ஒரு வண்டிக்கு வராகன் $7\frac{1}{2}$ முதல் $8\frac{1}{2}$.

பழயசரக்கு ஷை வராகன் 6 முதல் $6\frac{1}{2}$

Potatoes.

உருளைக் கிழங்கு.

மார்க்கட்உறுதி உள்ளூரில் உபாயபேரம் நடந்துவருகிறது. கிராக்கிக்குத் தகுந்தபடி பெங்களூர்சரக்குமட்டிலும்தருவிக்கப்படுகிறது. விஜாகப்பட்டணம், ராஜமகேந்திரபுரம், காக்கிநாடு முதலிய ஊர்களுக்கு சுமார் தினம் 50 மூட்டைகள் ஏற்றப்பட்டு வருகின்றன. நாளது தேதி விலை.— கண்டி ஒன்றுக்கு ரூபாய் 15 விலை.

Onions.

வெங்காயம்.

மார்க்கட்மந்தம். பினங் சிங்கப்பூர், ரெங்கூன் ஏற்றுமதிக்காக உள்ளூரில் உபாயபேரம் நடந்து வருகிறது. கையிருப்பு அதிகமில்லை. மேலேகண்டவிடங்களிலிருந்து தாராளமான ஆர்டர்களுமில்லை. ஏன் என்றால் வர்த்தகர்கள் பர்மா, கல்கத்தா, பம்பாயிலிருந்து தருவித்துக் கொள்ளுகிறார்கள், தேவைக்குத் தகுந்தபடி சப்பளை செய்ய பல்லாரி, தாட்பத்திரி சரக்குகள் தருவிக்கப்படுகின்றன. வியாபாரிகள் உற்சாகம் குன்றிப்போயிருக்கிறார்கள். நாளது தேதி விலை.—

பெல்லாரி ஒரு கண்டி ரூ 7 முதல் ரூ 8.
தாட்பத்திரி ஷை ,, 8 முதல் ,, $8\frac{1}{2}$.

Camphor.

கற்பூரம்.

மார்க்கட்டில் விலைகள் இறக்கமாயிருக்கின்றன B. B. கற்பூரம் இப்பொழுது வருகிறதில்லை. இதற்கு சமமாக ஜப்பான் சுத்திசெய்த கற்பூர பவுடர் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆசாமி முறிந்து போயிவிட்டது முதல் ஹாங்காங் கற்பூரம் வருகிறதில்லை. பலகைசூடம் ஒரு பவுண்டு டப்பாவில் சுமார் ஆயிரம் கேஸ்கள் கையிருப்பிருக்கின்றன. முக்கால் பவுண்டு டப்பாவில் கையிருப்பில்லை. நாளது தேதிவிலை.—ஜப்பான் சுத்தி செய்யப்பட்ட பவுடர் 1 பைக்கல் ரூ 152—153.

பலகைச்சூடம 1 பௌண்டு டின்		ரூ 1—1—6
ஷை	$\frac{3}{4}$ பவுண்டு	ரூ 1—1—0

Twist and yarn.

நூல்.

மியூல் (Mule Twist) மார்க்கட் உறுதியாயிருக்கிறது. வர்ணம் மார்க்கட் மந்தமாயிருக்கிறது. மியூல் சரக்கு கையிருப்பு பூஜ்யம். வர்ணச் சரக்கு கையிருப்பு போதுமானதிருக்கிறது.

40' ஜியார்ஜ் மாயல் ரகம்	ரூ	3	12	6
40' கிளாஸ்கோ	ரூ	4	6	0
60' மியூல்	ரூ	4	3	0
55 மியூல்	ரூ	4	4	6
60' முதல் ரகம் மிடீயோ	ரூ	6	1	6
60' ஷை ஷை	ரூ	6	0	0
50 இரண்டாவது ரகம் மீடீயோ	ரூ	5	6	0

:(*):

வர்ண நூல்.

40' முழுநிறை—அறைமஞ்சள்	ரூ	4	10	0
40 ஆரன்ஞ்—முழுநிறை	ரூ	4	14	0
44/40 அறைமஞ்சள்	ரூ	4	4	6
ஷை ஆரன்ஞ்	ரூ	4	8	6
60 மயில்—சிகப்பு	ரூ	9	2	0

Gunnies.

சாக்கு.

மார்க்கட் மந்தம்; தினம் ஒரு பேல்கூட கரைவது கஷ்டமாயிருக்கிறது போதுமான கையிருப்பிருக்கிறது. ரஜமகேந்திரபுரம், பெஜவாடா, மைசூர் முதலிய விடங்களிலிருந்தும் வியாபாரிகள் ஆர்டர்கள் அனுப்புகிறதில்லை நாளது தேதி விலை.—

44×28 கனமார்க்	ரூ	44	0	0
ஷை இலேசு	ரூ	41	0	0
40×29 L. K.	ரூ	43	8	0
44×26½ B. டிவில	ரூ	39	8	0

27—2—1914.

Cotton.

பஞ்சு.

மார்க்கட் மந்தம். நாளது தேதி விலை.—

குட்லெஸ்டர்ன் ஒருகண்டி ஒன்றுக்கு	ரூ	152
கொட்டை எடுத்த ஜின்ட் காட்டன் ஷை	ரூ	148

SKINS AND HIDES.

தோல்.

மாணு யேணு

மாட்டுத்தோல் வியாபாரம் துடக்க முதல் 1913 வருடம் வரைக்கும் வாங்குபவர்களும் விற்பவர்களும் அணு பைசா என்று பேசுவது சகஜம். இவ்வருடத்தில் சுமார் இரண்டுமாத காலமாய் ரூபாய்க்குமேல் அணு பைசா என்னும் பேச்சே வழங்கிவருகிறது! இவ்விலையை நோக்குங்கால் வியப்பாயிருக்கிறது. திடீரென்று இவ்வளவு விலை யேறினதற்குக் காரணங்கள் பல உள. முதல் காரணமாவது அமெரிகாவில் ஈஸ்ட் இண்டியாவில் பதனிட்ட தோல்களுக்கு இதுகாறும் விதித்திருந்த போட்டியை சில மாதத்திற்குமுன் எடுத்துவிட்டபடியால் அவர்கள் தற்காலம் சீமையில் வாங்க ஆரம்பித்து விட்டார்கள். இதுகாரணமாக சீமையில் முதலில் கொஞ்சிற்று விலையேறிற்று. இங்கு அந்த ஏற்றம் அபாரமாய்விட்டது. அவ்விடத்திய ஏற்றத்திற்கும் இவ்விடத்திய ஏற்றத்திற்கும் ஏணி வைத்துப் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. சீமையிலிருந்து முன் ஆர்டர் பெற்றவர்களுக்குப் பின்னார்டர் பெற்றவர்களுக்கு அரைபென்னி அதிகமானதால் இவர்கள் கொஞ்சித்து உயர்த்தி வாங்கும்போது முன் வாங்கினவர்களுக்கு கட்டுபிடியாகாமையினால் இவ்விலை தங்கள் காலவரைக்குள் இறங்கிவிடுமென்று உத்தேசித்து கரிதை மெதுவபடுத்தினார்கள். இதனிடையில் சீமையில் மறுபடியும் உண்டான டிமாண்டினால் மறுபடியும் ஆர்டர் பெற்றவர்கட்கு இன்னம் அரைபென்னி அதிகம் கிடைத்து விட்டது. பின்னார்டர் பெற்ற இருவரும் போட்டிபாய் விலையேற்றி வாங்கும்போது இவர்கள் முடிவு குறைந்தவிலைக்கு ஆர்டர் பெற்று இறங்குமென்று எதிர்பார்த்து

கரிது நிருத்திராத தாங்களுக்கு குறித்த தவணை நெருங்கிவிட்டபடியால் கொஞ்சம் நஞ்சம் வாங்குவனத விதியில்லாமல் பின்வாங்குபவர்கட்கு மேல் அதிக விலைகொடுத்து வாங்கும்படியாய் நேரிட்டுவிட்டது. இதுவன்னியில் சில ஆபீஸ்காரர்கள் சில சாக்குகள் தங்கள் கைவசமேலிருந்தால் பின்னிட்டு தங்களுக்கே ஆர்டர் கிடைக்குமென்றும் அதினால் அபரிமிதமான லாபமடையலாமென்றும் இப்போது விலையுயர்த்தி வாங்குவதாயும் தோற்றுகிறது. இதற்கு சரியாகவே சில மண்டிக்காரர்கள் புறளியு மிருக்கிறது. அவர்கள் கட்டிவிடும் கயிறு சப்பிக்கயிற்றைப்போல் கெட்டியாய் விடுகிறது. இத்தியாதி சம்பவங்களெல்லாம் ஒன்று சேர்ந்து எதிர் பாராத விஷயமாய் இமயகிரி பர்வதத்தின் உச்சியைப்போல விலையுயர்ந்துவிட்டது. இவ்விலை யிப்படியே யிருக்குமென நம்புவதற்கு யேதுவில்லை. சீமையில் டிமாண்ட் குறைவுபடும் பக்ஷத்தில் அகாரணமாய் பூச்சியைப்போல் உன்னத ஸ்தானத்தில் இருக்கப்படவில்லை. மாபலி சக்ரவர்த்தி யிருக்கும் ஸ்தானத்தில் அதாவது (பாதாள லோகத்தில்) தவஞ் செய்யப் போவதுபோல் போய்விடும். இதினால் அநேக வியாபாரிகள் கஷ்ட மடையவும் கூடும். மறுபடியும் பழைய ஸ்திதிக்கு பகீரதப் பிரயத்தனஞ் செய்யவேண்டிவரும். இத்தகைய விலை யேற்றத்தில் லாப மடைந்தவர்கள் யாரென்று சற்று யோசிப்போம். ஒற்றை, ரெட்டை பிடிக்கும் ஸ்பெகுலேட்டர்களா இல்லை, இல்லை மண்டிக்காரர்களா யில்லை, ஆபீஸ்காரர்களா அநேகமாய் அதுவும் யில்லையென்றே சொல்லி விடவேண்டும். பின்னையார்தான் லாபமடைந்தவர்கள்? தற்காலம் ஷாப்புக்காரர்களென உறுதியாய்ச் சொல்லாமல் சொல்லக்கூடும். ஏன் அப்படி உறுதியாய்ச் சொல்லக்கூடாதென்றால் ஷாப்புக்காரர்களடையும் லாபத்தை யுத்தேசித்து வரை உப்பு தோல் விற்பனை செய்பவர்கள் விலையேற்றி விட்டார்கள். இவ்வியாபாரத விலையிலும் லாபமடையக் கூடுமென்று ஷாப்புக்காரர்கள் உப்பு வரை மாணுக்கவும் வாங்கி அதிகமாய் இருப்பு வைத்திருக்கிறார்கள். இதுகள் நினைவுவிட்டு வெளியில் வருகிறதிற்குள்ளாக விலை யிறங்கிவிடக்கூடும். அப்படி யிறங்கிவிட்டால் இவர்களடைந்த லாபமெல்லாம் லோபமே! அடைந்தவர் பணத்தை வட்டியுடன் கக்கிவிடவேண்டிவரும். அந்தோ! இவர்கள் நிலைமை பின்னால் பரிதபிக்கப்படுவதே. இதினால் அனேகமாய் மண்டிக்காரர் சிலருக்கு கஷ்டம் நேரிடவும் கூடும். இத்தகைய கஷ்ட சம்பவங்கள் நேரிடாவண்ணம் முயல்வது தோல்வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் நலத்தை தருவதாயிருக்கும்.

பெங்களூர் பிரைம்	ரூ.	1	1	5	மு.	1	1	9
,, ஆர்டினரி		1	1	0	மு.	1	1	2
கோஸ்ட்		1	1	0	மு.	1	1	2
அயிதராபாக்கம்		1	1	9	மு.	1	2	6
பல்லாரி		1	1	5	மு.	1	0	7
ரூயதுர்க்கம்						1	1	5
மட்டுவோடா (கிரிஸ்ட்)		1	0	3	மு.	1	0	5
பெங்களூர்		0	12	6	மு.	0	12	9
கோஸ்ட்		0	11	0	மு.	0	12	0

வேணு.

மாறுதல் விசேஷம் கிடையாது; கிஞ்சித்து நிலையாயிருக்கிறது.

சேணு.

கொஞ்சம் மெதுவாயிருக்கிறது; பறபறப்பாயும் கிடையாது.

COMMERCIAL CASE IN COURT.

வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

MADRAS HIGH COURT.
சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

1914-வது வருஷத்திய முதல் கிரிமினல் சேஷன்ஸ்.

சேஷன்ஸ ஜட்ஜு: ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.

திங்கட்கிழமை:— பிப்ரவரி மீ 16உ

இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனி கேஸ் T. சின்னத்தம்பியென்பவர்பேரில் அடியிற்கண்ட குற்றங்கள் சட்டப்பட்டு ஐக் கோர்ட்டு கிரிமினல் செஷன்சக்கு கமிட் செய்யப்பட்டார்.

முதல் குற்றம்:— சின்னத்தம்பி முதலி என்பவர் சென்னையில் இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனி என்று ஒரு கம்பெனி ஏற்படுத்திக் கொண்டு கிருஷ்ணராவ் என்பவரை ஏஜண்டு வேலைக்கு ஜாமீனாக ரூ 4000-ம் கொடுக்கும்படியாகத் தூண்டி மோசப் படுத்தி இந்தியன் பினல் கோட் 420-வது பிரிவின்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்தைச் சென்னையில் 1912-ம் வருஷம் நவம்பர் மீ 19உ க்கும் 1913-வருஷம் பிப்ரவரி மீ 22உ க்கு மத்தியில் செய்திருக்கிறார்.

இரண்டாவது குற்றம்:—ஷை கிருஷ்ண ராவ் கொடுத்த ஜாமீன் தொகை ரூ 4000-மும் இந்தியன்பாங்கில் டிபாஸிட்டாக போடுவதாக சின்னத்தம்பி முதலி ஒப்பிப் பெற்றுக் கொண்டு அந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக அந்தப் பணத்தைஇந்தியா பர்மா டிரேடிங் கம்பேனியின் சொத்தாக பாவித்து பிரயோகப் படுத்தி இந்தியன் பினல் கோர்ட் 409-வது பிரிவின்படி தண்டிக்கப்படவேண்டிய குற்றத்தைச் செய்திருக்கிறார்.

லாயர்கள்:— போலீஸ் பிராஸிக் யூடர் பாரிஸ்டர் மிஸ்டர் J. A. ஆடம் பிராசிக்யூஷன் தரப்பிற்கும், வக்கீல் மிஸ்டர் N. கிருஷ்ணசாமி அய்யங்கார் குற்றவாளி தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

ஜூரர்கள்:— மிஸ்டர் G. W. மிட்ச்சல் (போர்மன்) மெசர்ஸ் K.B. ராமனாதய்யர், V.A. அனந்தராமய்யர், F. L. கோகலஸ், V. K. ராமநாத முதலியார், G.K.வாக்கர், M. கோண்டு ராவ், N. செங்கல் ராவ், A. L. ஹவுஸ்டன்.

பிராசிக்கியூஷன் தரப்பு பாரிஸ்டர் பேசினது:— குற்றவாளி ஏமாற்றின குற்றத்திற்காகவும் நம்பிக்கை மோசக் குற்றத்திற்காகவும் பிராசிக்கியூட் செய்யப்பட்டிருக்கிறார். யாதொரு லாபகரமான வியாபாரஞ் செய்ய வேணு மென்கிற எண்ணத் தோடும் குற்றவாளி இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனி என்று பெயர் கொண்ட ஒரு கம்பேனி ஸ்தாபித்தார். அவர் அடியிற் கண்டபடி வேலை செய்தார்:— முதலில் இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனி ஸ்தாபித்தார். பர்ஜஸ் அண்டு கோ என்கிற கம்பேனி ஷை இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனிக்கு காரியஸ்தர் களாக விருக்கும் படியாக ஏற்பாடு செய்து கொண்டார். பிராசிக் கியூஷன் தரப்பாரின் கக்ஷி என்னவென்றால் இரண்டு கம்பேனி களுக்கும் குற்றவாளியே பிரதிநிதி என்பதே. இதன் பிறகு இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனிக்கு ஆர்டிகல்ஸ் ஆப் அசோஷியேஷன் என்கிற விதிகள் ஏற்படுத்திக் கொண்டார். இதில் இக்கம்பேனியின் மூலதனம் ரூ 5 லக்ஷம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பிறகு கடப்பையைச் சேர்ந்த 4 பெரியமனுஷாளுக்கு இந்த கம்பேனி செவ்வையான லாபகரமான கம்பேனி என்று சொல்லி அவர்களை நம்பும்படியாகச் செய்து ஆர்டிகல்ஸ் ஆப் அசோஷியோஷனில் கையெழுத்து போடும் படியாகத் தூண்டினார்.

இதன் பிறகு மிஸ்டர் கிரே என்று பெயர் கொண்ட ஒரு வெள்ளைக்காரரை இக்கம்பேனிக்கு துபாஷாகவும் நியமித்துக் கொண்டார். இதன் பிறகு, தம் இஷ்டப்படி பொம்மைகள் போல தலையாடக் கூடியவர்களை கம்பேனிக் டைரெக்டர்களாக நியமித்துக் கொண்டார். இந்த டைரெக்டர்கள் எல்லாம் கம்பெனியின் லாபத்தை அனுபவத்தில் அறிந்து கொண்டு தங்களுடைய உத்தியோகத்தை ராஜினாமா செய்து விட்டார்கள். டைரெக்டர்கள் நியமிக்கப்பட்ட பின்பு கம்பேனியைப் பற்றி விளம்பரங்கள் பிரசுரித்தார். இந்த விளம்பரத்தில் மெசர்ஸ் கிங் அண்டு பார்ட்ரிட்ஜ் என்கிற லாயர் கம்பேனியார் இந்தியா பர்மா டிரேடிங் கம்பேனிக்கு சொலிசிடர்கள் என்று சொல்லப்பட்டிருந்தது. இது ஒரு புரட்டு. இதன் பிறகு தமக்கு ஜில்லா தோறும் பண்டகசாலை ஏஜண்டுகள் தேவை என்று விளம்பரங்கள் பிரசுரித்தார். இந்த விளம்பரங்களில் ஒன்று இந்தக் கேஸின் பிரியாதியாகிய மிஸ்டர் கிருஷ்ண ராவ் பார்த்தார். இவர் இருப்பு குண்டூர். தகுந்த யோக்கியதை உடையவர். இக்கம்பேனியில் ரூ 1000 க்கு பங்கு எடுத்துக் கொண்டு ஏஜண்டாக விருப்பதாக மிஸ்டர் கிருஷ்ண ராவ் ஒப்புக் கொண்டார். பிரியாதி ஜில்லா ஏஜண்டு வேலையை ஒப்புக் கொள்ளும்படியாகத் தூண்டப்பட்டார். பிரியாதியும் ரூபாய் 4 ஆயிரம் உடனே செலுத்தி ஜில்லா ஏஜண்டு வேலையை ஒப்புக் கொள்ளுவதாய் ஒப்புக் கொண்டார். ஜில்லா ஏஜண்டு வேலைக்கு ரூ பதினாயிரம் ஜாமீன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ரூ 10 ஆயிரத்தில் ரூபாய் ஆயிரத்திற்கு பிரியாதி கம்பேனியில் பங்கு எடுத்துக் கொள்ளவும் ரூ 4 ஆயிரம் உடனே செலுத்தவும் ஒப்புக் கொண்டார். பாக்கி ரூ 5. ஆயிரத்தை யின்னும் 6 மாதத்தில் செலுத்துவதாக ஒப்புக் கொண்டார். இருவரும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்னவென்றால், இவர்கள் இருவரும் செய்து கொண்ட ஒப்பந்த ஷரத்துப்படி தொகை ஒரு பாங்கியில் கட்டப்பட வேண்டுமென்றும் ஒருவர் சம்மதமின்றி மற்றொருவர் தொகையை பாங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளாதபடி இருவர் பெயராலும் பாங்கியில் கட்டப்பட வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். குற்றவாளி பணத்தைப்பெற்று மேற்படி ஒப்பந்த ஷரத்து போல இருவர் பெயராலும் பாங்கியில் கட்டாமல் இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனியின் நடைமுதல் கணக்கில் இந்தியன் பாங்கில் கட்டி இரண்டுவாரத்திற்குள் பணத்தை வாங்கி விட்டார். குற்றவாளி இந்த பணத்தைப் பெற்றுக்கொண்டவுடன் இம்மாதிரி கேஸ்களில் வழக்கம்போல பிரியாதுடன் ஒப்பந்த விஷயமாக சண்டை போட்டார். இது காரணமாக இந்தப் பிரியாது பிரியாதியால் செய்து கொள்ளப்பட்டது.

இதன்பிறகு பாரிஸடர் மிஸ்டர் ஆடம் குற்றங்கள் சம்பந்தமாக சட்டத்தை எடுத்துக் காண்பித்துப் பேசினார்.

கேசின் நடவடிக்கை:— பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளும் டிபன்ஸ தரப்பு சாக்ஷிகளும் விசாரணை செய்யப்பட்ட பின்பு இருதரப்பு லாயர்களும் அட்டிரஸ் பேசினார்கள். இதன் பேரில் ஜட்ஜி ஜூரர்களுக்கு கேஸின் சாராம்சத்தை எடுத்துச் சொன்னார்.

ஜூரர்கள் அபிப்பிராயம்:— ஜூரர்கள் ஆலோசனை அறைக்குள் கூட செல்லாமல் விற்றிருந்தபடியே கைதி நம்பிக்கை மோச குற்றத்தையும் ஏமாற்றின குற்றத்தையும் செய்திருக்கும் குற்றவாளி என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

குற்றவாளியின் லாயர் எழுந்திருந்து குற்றவாளி 19 வருடத்திற்கு முந்தி ஒரு தடவை தண்டனைப் பட்டவர் என்றும் பிரஸ்தாப கேசில் 4 மாதங்கள் வரையில் ரிமாண்டு ஜெயி

வில் வைக்கப்பட் டிருக்கிறார் என்றும் ஆதலால் அவருக்கு கோர்ட்டார் லெகுவான தண்டனை விதிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

தீர்மானம்:— கோர்ட்டார் ஜூரர்களின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளி சாமர்த்தியமான மோசம் நடத்தி யிருக்கிறான் என்று சொல்லி ஒருவருட கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

AUDIT ORDERS.

தணிக்கை உத்திரவுகள்.

மதராஸ் ஸேன்ட்ரல் அர்பன்பாங்கி லிமிடெட்.

1912-13 வருஷத்திய தணிக்கை உத்திரவு.

மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியினது 1912-13 வருஷத்தியக் கணக்குகளை அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராராகிய ம-ா-ா-ஸ்ரீ A. வேதாச்சலமய்யர் B. A. அவர்கள் தணிக்கை செய்தார். அதின், வரவு செலவு, லாப நஷ்டம், ஆஸ்திக்கடன் ஸ்டேட்மெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டன.

2. அவ்வருஷத்தில் பாங்கியின் நிகரலாபம் ரூ. 52,090-4-7. பாங்கியின் 17-வது நெ. பைலாவின்படி, நிகரலாபத்தில் 8-ல் 3-பங்கு—அதாவது ரூ. 19,533-13-9. க்ஷேமநிதிக்குக் கொண்டுபோக வேண்டியது. இத்தொகையை மதராஸ் பாங்கியில் போட கேட்டுக் கொள்ளப்பட்டது. லாபத்தில் பாக்கியிருக்கும் தொகையை அதாவது ரூ. 32,356-6-10, பாங்கி தீர்மானிக்கும் பிரகாரம், டிவிடெண்டு, போனஸ், முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்.

3. ரெஜிஸ்டரான சங்கங்களின் சங்கியை அவ்வருஷத்தில் மிகவும் குறைவாயிருந்த போதிலும், பாங்கியின் லேவாதேவிகள் அதிகரித்தன. பாங்கியின் டிபாஸிட்டுகள் (மதராஸ், இந்தியன், பாங்கிகளிலிருந்து எடுத்த தொகையுள்பட) ரூ. 18·99 லக்ஷத்திலிருந்து, ரூ. 32·16 லக்ஷத்திற்கும், கடன் வாங்கின தொகையின் வட்டி ரூ. 0·73 லக்ஷத்திலிருந்து, ரூ. 1·09 லக்ஷத்திற்கும், சங்கங்களிலிருந்தும், மெம்பர்களிட மிருந்தும் வரவேண்டியதொகை ரூ. 20·91 லக்ஷத்திலிருந்து ரூ. 23·81 லக்ஷத்திற்கும் அதிகரித்தன.

சங்கங்கள், ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து வாங்கின கடனில் திருப்பிக்கொடுத்தது சென்ற வருஷத்தில் ரூ. 2·17 லக்ஷம், ஆனால் இவ்வருஷத்தில் ரூ. 3·60 லக்ஷம். இதனால், சென்ற வருஷத்தில் கடன் வசூலாகாமல் நிலுவையிலிருந்ததொகை ரூ. 2·79 லக்ஷமானது, இவ்வருஷத்தில் ரூ. 1·89 லக்ஷத்திற்குக் குறைந்துவிட்டது. நிகரலாபமானது 100-க்கு 22·6 விகிதம் அதிகரித்தன. அபராத வட்டி சென்ற வருஷத்தில் ரூ. 362-ம் இவ்வருஷத்தில் ரூ. 673-0-0 வசூல்செய்யப்பட்டன; முதலிற் கூறிய வட்டியானது, 1912-13 வருஷம் ஆரம்பத்திலுள்ள கடன் நிலுவைத் தொகையாகிய ரூ 14·13 லக்ஷத்தின் பேரிலும், பின் கூறிய வட்டி 1912-13 வருஷம் ஆரம்பத்திலுள்ள கடன் நிலுவை ரூ, 20·68 லக்ஷத்தின் பேரிலும் வசூலிக்கப்பட்டன.

4. அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரின் ஆடிட் ரிபோர்ட்டு 22-வது பாராவில் கூறியவைகளுக்கு பாங்கியின் கவனம் செலுத்தப்படவேண்டும். அதில் பாங்கியின் ஆலோசனைக்கு சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முதலாவது.—மதராஸ் ஸென்ட்ரல் பாங்கி கடன் கொடுக்கும் தொகையின் வட்டியைக் குறைக்க காலம் வந்துவிட்டதென்று ரெஜிஸ்ட்ராரவர்கள் நம்புகிறார்.

இரண்டாவது:—வட்டி கணக்கிடும் பொழுது, 15 நாட்களுக்குக் குறைந்ததினங்களை 15 நாள் என்று கணக்குச் செய்யாமல், வட்டி கொடுக்கவேண்டிய தினங்களை மாத்திரம் கணக்கிடும்படியாக, பாங்கிக்கு யோசனை சொல்லப்படுகிறது.

மூன்றாவது.— எல்லா நடவடிக்கைகளில், இதரச்செலவுகளுடன் அணா ஒன்று அதிகமாய் வாங்குவதை நிறுத்தவேண்டும்.

நான்காவது.—ஸென்ட்ரல் பாங்கியில் டிபாஸிட்டு செய்த சங்கங்களின் க்ஷேமநிதிக்கு 100-க்கு 5 விகித வட்டிக்கு அதிகம் கொடுக்க யோசனை செய்வது தகுதியானகாரியம்.

ஐந்தாவது.—ஸென்ட்ரல் பாங்கியானது விசாரிக்கும் உத்தியோகஸ்தரை ஒருவருக்குக் குறையாமல் நியமிக்கவேண்டுமென்று ரெஜிஸ்ட்ராரவர்கள் மறுபடியும் வற்புறுத்துகிறார். 1912-ம்வருஷம் செப்டம்பர்மாதம் 7-ந்தேதியிற்கூட்டிய பங்குக்காரர்களின் மீட்டிங்கில், பாங்கியின் பிரசிடெண்டு அவர்கள் கூறிய இவ்யோசனையின் ஆக்ஷேபணைகளை ரெஜிஸ்ட்ராரவர்கள் வாசித்தார். இதர ஜில்லாக்களில் இந்தபாங்கியின் லேவா தேவிகளைப் பாதுகாக்க, இப்பொழுது ரெஜிஸ்டராரும் அவருடைய சிப்பந்திகளும் அதற்கு வேண்டிய விஷயமாய் வெளியில் விசாரித்து வருகிறார்கள். விசாரிக்கும் செலவில் கவர்ன்மெண்டாருக்கு பாங்கியானது ஒத்தாசைகொடுக்கவேண்டுமென்பதற்கு, பாங்கியின் லேவாதேவிகள் விசாலித்திருக்கின்றன என்ற பதில் சொல்லுகிறார்கள். பணம் உதவப்படும் சங்கங்கள் அதிகமாகஏற்பட கவர்ன் மெண்டாருக்குச் செலவு அதிகமாகின்றது. இன்னும் அநேக வருஷங்களுக்கு கவர்ன்மெண்டார் இச்செலவை தாங்களே பொறுக்கவேண்டுமென்று பாங்கி விருப்பப்படுகிறது.

வருஷந்தோறும், டிவிடெண்டு 12 விகிதம் கொடுத்தபிறகு, பாக்கியுள்ள ஏராளத்தொகையை ஒன்று சேர்த்துக்கொண்டு இப்படிச் சொல்வது அழகல்ல. பாங்கியின் உத்தியோகஸ்தர்களுக்கு சங்கங்களின் கணக்குகளை சோதனை செய்ய அதிகாரமில்லையென்னும் ஆக்ஷேபணையானது, கவர்ன் மெண்டார், அவர்களுக்குத் தகுந்த அதிகாரம் கொடுத்துவிட்டால், நிவர்த்தியாகும். பம்பாயிலுள்ள ஸென்ட்ரல் பாங்கியானதுவிசாரிக்கும் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்ததாக, வருஷாந்திர ரிபோர்ட்டில் ரிஜிஸ்டாராவர்கள் எழுதியிருப்பதை கவனிக்கவேண்டும். சென்னை ஸென்ட்ரல் பாங்கி இதற்கு சம்மதமில்லாமலிருந்தால், தன் லேவாதேவிகளைப் பார்த்துக்கொள்ள ஜில்லா பாங்கிகளுக்காவது அதிக கமிஷன் கொடுக்கவேண்டும்.

5. பாங்கியானது மிகவும் திருப்திகரமாய் வேலை செய்துவருவதால், அதை மிகவும் பிரப்லம் செய்ய உத்தேசித்து மேற்கூறிய யுக்தங்களை ரெஜிஸ்ட்ராரவர்கள் சொல்லுகிறார். இந்த பாங்கியின் உதவியால், சென்னை ஐக்கிய இயக்கம் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. பாங்கியின் டைரெக்டர்களும் நிர்வாக உத்தியோகஸ்தர்களும் சுயநலம் பாராமல் பாங்கியின் வேலைகளை நடத்தி வந்தது மிகவும் மெச்சத்தகுந்தது.

மதுரை ராமனாதபுரம் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கி (லிமிடெட்)

1912-13—வருஷத்திய தணிக்கை உத்திரவு.

30—6—13 யில் முடிவுபெற்ற கோவாப்ரேடிவ் வருஷத்திய, மதுரை ராமனாதபுரம் ஸென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கியின் கணக்குகள் இன்ஸ்பெக்ட்டர் மிஸ்டர் டி. என். ராம்சந்திர ராவ் அவர்களால் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன.

2. அவ்வருஷத்தில் பாங்கியின் நிகரலாபம் ரூ. 3,057-3-10; பைலா 21 ல் கூறியபடி இந்த லாபம் அடியிற் கண்டபடி பிரிபடவேண்டியது:—

		ரூ. அ. பை.
1. க்ஷேம நிதி	...	764-4-11.
2. காரியதரிசிக்கு வெகுமதி	...	382-2--5.
3. டிவிடெண்டுக்கும், போனஸுக்கும் கொடுபடவேண்டிய தொகை		1910-12-6.

10-க்கு 9 விகிதத்திற்குமேல் டிவிடெண்டு கொடுக்கக்கூடாதென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள தொகையை 'டிவிடெண்டு சமப்படுத்தும் நிதிக்கு கொண்டுபோகவேண்டியது.

3. பாங்கியானது ஆரம்பத்திலேயே ஒழுங்காயிருக்கிறது. அதின் டைரெக்ட்டர்களில் இரண்டுபேர்கள் மெஸ்ஸர்ஸ் ஆர். அனந்தராவ் அவர்களும, கே. ராமஸாமிஅய்யர் அவர்களும், தங்களுக்கு அவகாசமுள்ள காலங்களில் பரிசோதனை செய்து வருகிறார்கள். இவ்வகை சோதனை செய்தல் போதாது. பாங்கியானது தன்னுடன் சேர்ந்த சங்கங்களை ஏற்பாடாய் சோதனை செய்து வரத் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வளவு குறைந்த காலத்தில், இச்சங்கத்தை மிகவும் அபிவிருத்திக்கு வரும்படி, டைரெக்ட்டர்கள், விசேஷமாக ம-ா-ா-ஸ்ரீ கே. ராமஸாமி அய்

யர் அவர்கள், பாங்கியின் வேலையை நடத்திவந்தது மிகவும் புகழத்தக்கது. இந்த ராஜதானியிலுள்ள ஜில்லா கோவாப்ரேடிவ் யூனியன்களில், முதன்மையாயிருப்பவைகளில் ஒன்று இச்சங்கம் உயர்ந்து விளங்குவதில் ஆக்ஷேபணையில்லை.

தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேடிவ் ஸென்ட்ரல் பாங்கி (லிமிடெட்)

1912-13-ம் வருஷத்திய தணிக்கை உத்திரவு.

தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேடிவ் ஸென்ட்ரல் பாங்கியின் அவ்வருஷத்தியக் கணக்குகள், இன்ஸ்பெக்ட்டர் மிஸ்டர் சி. கோவிந்தஸாமி முதலியாரவர்களால் தணிக்கை செய்தபடி அங்கீகரிக்கப்பட்டன.

2. பாங்கியின் வருஷத்திய நிகரலாபம் ரூ. 339-8-0; பைலா 20 தின் பிரகாரம் மேற்கூறிய லாபம் பின்வருமாறு பிரிக்கப்படவேண்டியது.

	ரூ.	அ.	ப.
1. க்ஷேமநிதி	84	14	1
2. காரியதரிசிக்கு வெகுமானம் ...	42	7	0
3. டிவிடெண்டு, போனஸ், தர்மகாரியங்கள் முதலான இவைகளுக்குப் பிரிபடவேண்டிய தொகை ...	212	3	4

3. இந்த பாங்கி ஏற்பட்டு 5 மாதம்தான் வேலை செய்திருக்கிறது. நன்றாய் ஆரம்பித்திருக்கிறது. காரியதரிசி மிக்க ஊக்கத்துடன் வேலைசெய்து வருகிறார். பாங்கியின் நடவடிக்கைகளில், நிர்வாக கமிட்டி மெம்பர்கள் பொறுப்பு எடுத்துக்கொள்ளுவதாகத் தோன்றுகிறது. இது மிகவும் மெச்சத்தக்கது இப்பாங்கி யேற்படும்பொழுது, ஸ்தல டிபாஸிட்டுகள் ஏராளமாய் வந்து விழுமென்று எண்ணப்பட்டது. நினைத்தபடி முழுவதும் பூர்த்தியாகவில்லை. ஆனால், மற்ற ஸென்ட்ரல்பாங்கிகளிலிருந்தும் கடன் வாங்காதபடி, இனி ஸ்தல டிபாசிட்டுகள் நிரம்ப வந்து விழுமென்று நம்பப்படுகிறது.

சேலம்ஜில்லா அர்பன் பாங்கி, (லிமிடெட்)

1912-13 வருஷத்திய தணிக்கை உத்திரவு.

சேலம் ஜில்லா அர்பன் பாங்கியின் 1912-13 வருஷத்தியக் கணக்குகள் மிஸ்டர் ஆர். தேசிகாசாரியார் அவர்கள் தணிக்கை செய்தபடி, அங்கீகரிக்கப்பட்டன.

2. பாங்கியின் நிகரலாபம் ரூ. 6742-14-10; அது 19-வது பைலாவிற் சொல்லியபடி, கீழ்க்கூறியவிதம் பகுபட வேண்டியது:—

	ரூ.	அ.	ப
1. க்ஷேமநிதி	1685	11	9
2. காரியதரிசிக்கு வெகுமானம் ...	300	0	0
3. டிவிடெண்டாகப் பிரித்துக்கொடுக்கும் தொகை	4737	3	1
	6742	14	10

3. பெரிய இன்ஸ்பெக்ட்டர் காண்பித்த குறைவுகளை பாங்கியானது கவனிப்பதோடு, வேண்டிய கணக்குகளையும் ரிஜிஸ்ட்டர்களையும் ஒழுங்காய் வைத்துக்கொள்ள வேண்டும்.

4. க்ஷேமநிதித் தொகையாகிய ரூ. 1685-11-9-ல் மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கியால் 1913-வரு ஜூன்மாதமுடிய கொடுக்கப்பட்ட வட்டி ரூ. 90-14-1 போக, பாக்கியுள்ள ரூ. 1594-15-8, தொகையை மேற்கூறிய பாங்கியில்போட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் க்ஷேமநிதியின் மொத்த தொகை இதுவரையில் ரூ 5137-2-9.

5. காரியதரிசியான மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அவர்கள் மிக்க ஊக்கத்துடன் பாங்கியை நிர்வகித்து வந்திருக்கிறார். பாங்கியானது பங்குதாரர்களுக்கு நல்ல டிவிடெண்டு கொடுத்தபோதிலும், இந்தியன் பாங்கியிலிருந்து வாங்கின கடனை சீக்கிரத்தில் அடைக்கப் பிரயத்தினம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னை சட்ட நிருபண சபை.

சென்னை மாகாண சட்ட நிருபண சபை மீட்டிங் ஒன்று சென்ற ஜனவரி மீ 27௳ சென்னைக் கோட்டையி லிருக்கும் கவர்னர் மந்திரா லோசனை மாளிகையில் நடை பெற்றது; வழக்கம் போல் கனந்தங்கிய கவர்னர் அவர்கள் சபா நாயகரா யிருந்தார்கள். அடியிற்கண்ட கவர்ன்மெண்டு தரப்பு ஆனரபில் மெம்பர்களும் பிரதிநிதி ஆனரபில் மெம்பர்களும் விஜயஞ் செய்திருந்தார்கள்:— சர் ஜான் அட்கின்சன், மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர், சர் ஹாரல்ட் ஸ்டூவர்ட், டக்டர் T.M. நாயர், றாவ்பகதூர் B. சர்மா, றாவ்பகதூர் A.S. சுப்பராயலு செட்டி, றாவ்பகதூர் V.K. றாமாநுஜாசாரியார், தொட்டப்பநாய்க்கனூர் ஜமீந்தார், ஷேய்பா அல் முல்க், T. ஜெயின் அல் ஆபிடின், றாவ்பகதூர் P. கேசவப்பிள்ளை, மெசர்ஸ் T. V. சேஷகிரி அய்யர், A. S. கிருஷ்ணராவ், B. V. நரசிம்ம அய்யர், K. P. றாமன் மேனன். K. றாமய்யங்கார், K. R. V. கிருஷ்ணராவ், C.V.S. நரசிம்மராஜு, K சிதம்பரநாத முதலியார், V. குன்கிராமன் நாயர் A. E. G. M. அகமத் தம்பி மரக்காயர், A. D. ஜாக்டன், R. M. சாலேஜ், E. F. பார்ப்பார், W. O. ஹாரன் சர்ஜன் ஜெனரல், W. B. பானர்மன், கர்னல் E. M. எல்லிஸ் ஆல்பிரட்போர்ன், சர்பிரான்சிஸ் ஸ்பிரிங், தரக்கோட்டை ராஜா றாவ்பகதூர் P. C. சோமசுந்திர செட்டி, மெசர்ஸ் L. E. பக்லி, R. C. C. கார், A. பட்டர்வொர்த், C. R. M. ஷிமிட், S. D. பியர்ஸ், F.H.M. கார்பர்ட், W. இல்மான், W. பிரான்சில் V. S. சீனிவாச சாஸ்திரி, மியூர் எட், A. ரிச்மெண்டு, A. R. கம்பில்.

கேள்விகளும் ஜவாப்புகளும்.

மிஸ்டர் B. V. நரசிம்மய்யர்.

கே. 4. சென்னை லோகல் போர்டு ஆக்ட் 57 வது பிரிவு சீர் திருத்தப்படப் போகிற விஷயம் எல்லா ஜில்லா போர்டுகளுக்கும் அறிவிக்கப்பட்டதல்லவா (a) அவர்கள் எல்லாரும் என்ன பதில் அனுப்பியிருக்கிறார்கள் (b) ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் இந்த சீர் திருத்தத்தைப்பற்றி எத்தனைபேர்கள் அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள் (c) எத்தனை பேர்கள் செஸ்வரியை உயர்த்துவதற்கு லோக்கல் போர்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்படக் கூடாதென்று ஆக்ஷேபிக்கிறார்கள், எத்தனைபேர்கள் அதிகாரம் கொடுக்கப்படலா மென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். எத்தனைபேர்கள் சில நிபந்தனைகள் பேரில் அவ்வதிகாரம் கொடுக்கப்படலாமென்று சொல்லுகிறார்கள் என்று கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப்படுவார்களா?

ஜ. 4.—(a) நான்கு ஜில்லா போர்டுகள் இன்னும் பதில் எழுதவில்லை. (b & c) சீர் திருத்தத்தை ஆக்ஷேபித்து அனேக கடிதங்கள் வந்திருக்கின்றன. எல்லா ஜில்லா போர்டுகளிட

பிருந்து பதில் வந்த பின்பு யோஜனை செய்யப்படும். அப்படி யோஜனை செய்யப்படும்போது இந்த கடிதங்களில் சொல்லப்பட்ட விஷயங்களும் கவனிக்கப்படும்.

கே. 5.—இந்தியன் பேட்ரியட், மதிராஸ் ஸ்டான்டர்ட் முதலிய பத்திரிகைகளில் "மிஸடர் ஸகஸிசும் சவுக்கடியும்" என்று தலை பெயர் கொண்ட வியாசங்கள் பிரசுரமாயிருக்கின்றனவே அவைகளை கவர்ன்மெண்டார் கவனித்தார்களா (a) சப் மாஜிஸ்டிரேட்டுகளால் அனுப்பப்பட்ட 12 கேசுகளில், திருப்பத்தூர், வேலூர், குப்பம், குடியாத்தம் வாணியம்பாடி, ஆகிய இந்தவிடங்களில் டாக்டர்கள் இடைக்கக்கூடியதா யிருந்தும் டாக்டரை சமீபத்தில் வைத்துக்கொள்ளாமலே மிஸடர் ஸகஸ தம்முடைய கையினாலேயே சவுக்கடி அடித்திருப்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? (b) சாதாரணமாக மாஜிஸ்டிரேட்டுகள் தங்களுடைய கையினால் சவுக்கடி அடிக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பிப்பார்களா? (c) வெளிக்கு வந்திருக்கும் சவுக்கடி கேஸ்களில் மிஸடர் ஸகஸ் தம்முடைய கையினாலேயே சவுக்கடி அடித்திருப்பது உண்மைதானா?

ஜ, 5.—18ம் நெ. கேள்விக்குச்சொல்லப்பட்டிருக்கும் ஜவாப்பைப் பார்க்கும்படி ஆனரபில் மெம்பர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ருவ் பகதூர் P. கேசவப்பிள்ளை.

கே. 17.—ஜட்ஜி மிஸடர் சுந்திரமய்யர் காலத்தில் ஐக்கோர்ட்டில் எத்தனை இந்திய ஜட்ஜிகள் இருந்தார்களோ அந்த கணக்கின்படி எப்போதுமிருக்கும்படியாக காலியாயிருக்கும் ஜட்ஜி மிஸடர் சுந்திரமய்யர் ஸ்தானத்தில் ஒரு இந்திய ஜட்ஜியை காயமாக நியமிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

பதில் 17.—ஐக்கோர்ட்டிற்கு காயமாக ஜட்ஜி நியமனஞ் செய்யும் அதிகாரம் இந்த கவர்ன்மெண்டாருக்குக் கிடையாது.

கே. 22.—திருநல்வேலி தென் ஆற்காடு செங்கற்பட்டு ஜில்லாக்களில் உண்டான வெள்ளப் பிரவாகத்தால் அடியோடு சேதமான கிராமங்களின் எண்ணிக்கையையும், பாதி சேதமடைந்த கிராமங்களின் எண்ணிக்கையும், எத்தனை தடாகங்கள் உடைத்துக் கொண்டன வென்றும், ஒவ்வொரு ஜில்லாவிலும் உயிர் சேதமும் கால்நடைச் சேதமும் எவ்வளவு உண்டானதென்றும் (b) இந்த வெள்ளப் பிரவாகத்தால் பயிர் சேதப்பட்டதா வென்றும் (c) திருநல்வேலி ஜில்லாவில் மழையில்லாததால் சாகுபடி குன்றிப் போனது வாஸ்தவம்தானா வென்றும் சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப் படுவார்களா? (d) இம்மாதிரியான சம்பவங்களால் பாதிக்கப்பட் டிருப்பவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க கவர்ன்மெண்டார் உத்தேசம் செய்துகொண்டிருக்கிறார்களா என்றும் அப்படியானால் எப்படி நிவர்த்திக்கப் போகிறார்கள் என்றும் சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 22. தென் ஆற்காடு ஜில்லாவில் உண்டான வெள்ளப் பிரவாகத்தைப்பற்றி ஆனரபில் மிஸ்டர் சுப்பராயலு ரெட்டியார் கேட்ட 115-ம் நெ. கேள்விக்கு சொல்லப்பட்ட ஜவாப்பை பார்க்கும்படி ஆனரபில் மெம்பர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். திருநல்வேலி ஜில்லா வெள்ளப் பிரவாகத்தைப்பற்றி அந்த ஜில்லா கலெக்ட்டரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அச்சிட்ட ரிப்போர்ட் ஒன்று ஆனரபில் மெம்பருக்கு அனுப்பப்படும். திருநெல்வேலியில் இந்த வருடம் பயிர் மிகவும் சுபிக்ஷமாகயிருக்கிற தென்றும், வெள்ளப்பிரவாகத்தால் சில தடாகங்கள் மட்டிலும் உடைத்துக்கொண்டன

வென்றும் பயிர்ச்சேதம் யாதொன்று முண்டாகவில்லை என்றும் இந்த ரிப்போர்ட் அறிவிக்கிறது. செங்கற்பட்டில் யாதொரு அபாயகரமான வெள்ளப்பிரவாகம் உண்டாயிருப்பதாக கவர்ன்மெண்டார் கெள்விப்படவில்லை.

ஆனரபில் மிஸ்டர் வி.கே. ராமானுஜாச்சாரியார்.

கே. 31. ரயிட்டர்கள் முதலிய சிப்பந்திகளுடைய சம்பளத்தை உயர்த்தும் பொருட்டு 1913-ம் வருடம் அக்டோபர் மாதம் 13-ந் தேதியில் உதகமண்டலத்தில் ஒரு கான்பரன்ஸ் கூடினதா? அப்படியானால் அந்த கான்பரன்சின் ரிப்போர்ட்டின்பேரில் கவர்ன்மெண்டார் என்ன உத்திரவு பிறப்பித்திருக்கிறார்களென்று சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 31. ஆம் கூட்டப்பட்டது. (2) இன்னும் முடிவானஉத்திரவுகள் செய்யப்படவில்லை. முடிவான உத்திரவுசெய்யப்பட்டபிறகு அவைகளைப் பயிரங்கப்படுத்த யோசனை செய்யப்பட்டபிறகு அவைகளைப் பயிரங்கப்படுத்த யோசனை செய்யப்படும்.

ஆனரபில் A.K.G.M. அகமத்தம்பி மரக்காயர்.

கே. 38 முனிசிபாலிட்டியிலும், லோக்கல் போர்டிலும் முகமதிய ஜனங்களுக்காக பிரத்தியேகமாக பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கும்படியாக கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய இணங்குவார்களா? அப்படி ஏற்பாடுசெய்ய சௌகரியப்படாவிடில், ஜில்லாவின் முகமதிய ஜனத்தொகைக்குத் தக்கபடி பிரதிநிதிகள் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படுவார்களா?

ஜ. 38. இது விஷயத்தில் இந்தியாகவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம் தெரியும் பரியந்தம் லோக்கல் கவர்ன்மெண்டார் யாதொன்றும் சொல்லமுடியாது.

ராவ்பகதூர் எம். ராமச்சந்திரராவ்.

கே. 44. பெரம்பூர் ரயில்வே வொர்க்ஷாப்பில் சிறிது மாதங்களுக்குமுந்தி நடந்த கலகத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் ரிப்போர்ட் பயிரங்கப்படுத்தி யிருக்கிறார்களா? ரெயில்வே வொர்க்ஷாப் அதிகாரிகள் வேலைக்காரர்களை துப்பாக்கிகொண்டு சுட்டது நியாயந்தான் என்று கவர்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்களோ? இது விஷயமாக வந்திருக்கும் ரிப்போட்டுகளை எல்லாம் கவர்ன்மெண்டார் பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா? ரயில்வே வேலைக்காரர்களின் சங்கத்தின் காரியதர்சியாகிய மிஸ்டர் ராஜர்ஸ் பெரம்பூர் வொர்க்ஷாப்வேலைக்காரர்களுக்குக் குறைகளிருக்கின்றனவென்று 1914ளு ஜனவரிமாதத்தில் பிரசுரமான ஹிந்து பத்திரிகையில் வெளிப்படுத்தினதும், மதிராஸ் தென்மராட்டா ரயில்வே ஏஜன்டுகளுக்கும், ரெயில்வேபோர்டாருக்கும், வைசிராய்க்கும், கவர்னருக்கும் லோக்கலகவர்ன்மெண்டாருக்கும் அறிவித்தது வாஸ்தவம்தானா? இவர்களுடைய குறைகளைப்பற்றி கலக சம்பவத்திற்கு முந்தியாவது பிந்தியாவது கவர்ன்மெண்டார் விசாரணை செய்திருக்கிறார்களோ?

ஜ. 44. ஆம், ரிபோர்ட்டுகள்வந்திருக்கின்றன. தற் காப்புக்காக வொர்க்ஷாப் அதிகாரிகள் துப்பாக்கிகளைக்கொண்டு சுட்டார்கள். அது நியாயந்தான் என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். போலீசார் மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பிய ரிப்போர்ட்டும், அதன்பேரில் மாஜிஸ்டிரேட்செய்த உத்திரவும், பிரேதபரிசோதனையின் இரண்டுரிபோர்ட்டுகளும்ஆகியஇவைகளை கவர்ன்மெண்டார் பயிரங்கப்படுத்த தயாராயிருக்கிறார்கள். மிஸ்டர் ராஜர்ஸ் இந்தியா கவர்ன்மெண்டார் ரயில்வே போர்டார் முதலியவர்களுக்கு எழுதியது கவர்ன்மெண்டார் அறியமாட்டார்கள். வேலைக்காரர்களுடைய குறைகளைப்பற்றி கலகத்திற்கு முந்தியும் விசாரணை செய்யப்பட்டது. கலகத்திற்குப் பிந்தியும் விசாரணை செய்யப்பட்டது. இப்போதும் அந்தவிசாரணை நடந்து வருகின்றது.

ஆனரபில் மிஸ்டர் ஜேமின்-அப்-அபிலின்சாயப்.

கே 54. அம்மாபட்டணம், தோண்டி, பாம்பன், தூத்துக்குடி முதலிய துறைமுகங்களில் பிரையாணிகள் சிலோனுக்கு ஏற்றப்படுகிறார்கள் என்றும் இந்த துறைமுகங்களில், சிலோன் கவர்ன்மெண்டார் (Segregation Camp) என்கிற பிளேக் பரிசோதனைக் கொட்டகைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள் என்றும் கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? அப்படித் தெரியுமானால் கன்னியாகுமரி முனையிலிருந்து யாழ்பாணத்திற்கு 36 மைல் தூரமாயிருப்பதால், வேதாரண்யம் திருத்திரப்பூண்டி இருப்பதையால் எதேஷ்ட பிரையாணிகள் போக்குவரத்து செய்யப்படுவார்களாகையால் பிரையாணிகள் அந்த துறைமுகத்திலிருந்து சிலோனுக்கு ஏற்றும்படியாக அவ்விடத்திலும் ஒரு பிளேக்பரிசோதனை காம்ப் போடும்படியாக கவர்ன்மெண்டார் சிலோன் கவர்ன்மெண்டாருக்கு எழுதி ஏற்பாடுசெய்ய இஷ்டப்படுவார்களா?

ஜ. 54.—(ஏ) அவைகள் எல்லாம் உண்மைதான். கன்னியாகுமரி முனை துறைமுகத்தில் பிரையாணிகள் சிலோனுக்கு ஏற்றும்படி வசதிகள் செய்யவேண்டுமென்று சிலோன் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படவில்லை. ஆதலால் அதுவிஷயமாக மறுபடியும் எழுத நம்முடைய கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமில்லை.

ஆனரபில் மிஸ்டர் வி. குன்கிராமன் நயனார்.

கே. 57. பாலக்காட்டில ஒரு பள்ளிக்கூடப் பையனை ஒரு எமிகிரேஷன் ஏஜண்டு அப்பையனின அபிபபிராயங்களுக்கு விரோதமாக சிலோனிலுள்ள ஒரு தோட்டத்திற்கு அடித்துக்கொண்டு போய்விட்டதும், அப்பையனின் கார்டியன்களுடைய பிரியாதின்பேரில் வாரண்டு பிறப்பிக்கப்பட்டு அவனை மறுபடியும் பாலக்காட்டிற்குக் கொண்டுவரப்பட்டான் என்றும் ஏஜண்டின்பேரில் கேஸ் நடத்தப்பட்டதென்றும் கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? அந்தகேஸ்ரிக்கார்டுகளை கவர்ன்மெண்டார் தருவித்து சர்க்கார் உத்தியோகஸ்தார் எமிகிரேஷன் ஏஜண்டினிடம் தயவு தாக்ஷிண்யம் காட்டியிருக்கிறார்களோ என்று பரிசோதனைசெய்து பார்க்க இஷ்டப்படுவார்களா? இம்மாதிரி கேஸ்கள் இனி நடக்காதப்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்ய இஷ்டப்படுவார்களா?

ஜ. 57. இந்த விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் ஒரு சமாசாரப்பத்திரிகையில் பார்வையிட்டார்கள். அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைக்கொண்டு கவர்ன்மெண்டார் அதில் பிரவேசிப்பதற்கு முகாந்தரமில்லை என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர்.

கே. 83. கடந்த டிசம்பர்மாதம் நடந்த எல்லா இந்தியா முஸ்லிம்லீகில் பசுக்களை காவுகொடுப்பதைப்பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டதே அதைகவர்ன்மெண்டார் கவனித்திருக்கிறார்களா? உற்சவ அல்லது பண்டிகை சமயங்களில் ஹிந்துக்களும் முகம்மதியர்களும் இந்த விஷயமாக மோதிக்கொள்ளாமலிருக்கும் பொருட்டு இருவகுப்புகளிலும் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டு சென்னை ராஜதானி முழுமைக்கும் ஒரு கமிட்டி நியமிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 83. ஆம் தெரியும். இப்படி ஒரு கமிட்டி நியமிக்க கவர்ன்மெண்டாருக்கு இஷ்டமில்லை, ஏன் எனில் அப்பேர்ப்பட்ட ஒருகமிட்டியால் யாதொரு நன்மையும் விளையமாட்டாதென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். சாஸ்திரி.

கே. 125. கவர்ன்மெண்டிற்கு ஒரு நான்காவது செக்ரெட்டரி நியமிக்கப்படப்போகிறதாக பிரஸ்தாபமாயிருக்கிறதே அது வாஸ்தவந்தானா? உண்மையாயிருக்கின் அந்தஸ்தானத்தில் ஒரு இந்தியரை நியமிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 125. கவர்ன்மெண்டு செக்ரேட்டரி ஆபிஸைப் பலப்படுத்தவேண்டுமென்கிற கருத்துடன் இந்தியா கவர்ன்மேண்டாரும் இந்தியா காரியதரிசியுடனும் கடிதப் போக்குவரத்துகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. உத்திரவு வரும்பரியந்தம் அதைப்பற்றியாதொன்றும் சொல்லமுடியாது?

ஆனரபில் மிஸ்டர் ஏ. எஸ். கிருஷ்ணராவ்.

கே. 106. கள்ளுக்கடைகளையும் சாராயக்கடைகளையும் கவர்ன்மெண்டார் குறைத்திருந்தபோதிலும் கள்ளும், சாராயமும் கடந்த மூன்று வருஷமாக அதிகப்படியாய் விற்பனையாகி வந்திருப்பதை கவர்ன்மெண்டார் கவனித்திருக்கிறார்களா? இவைகள் அதிகப்படியாய்ச் செலவாகிவருவதைத் தடுக்க கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்வார்களா?

ஜ. 106. ஆம். ஆனால் ஜனத்தொகை விருத்தியாயிருப்பதால் மதுபானங்களின் விற்பனையும் உயர்ந்துகொண்டுபோயிருக்கிறது. கள்ளு சாராயம் சாப்பிடுவதைத் தடுக்க கவர்ன்மெண்டார் ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இனியும் வேண்டிய ஏற்பாடுசெய்வது அவர்களுடைய கடமையாகவே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனரபில் நரக்கோட்டை ராஜா.

கே. 131. இந்த ராஜதானியில் சிவில் கோர்ட்டு நடவடிக்கைகளைவிசாரணைசெய்ய மிஸ்டர் பிலிப்ஸ் நியமிக்கப்பட்டாரல்லவா? அவர் செய்திருக்கும் ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் பகிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா? இந்த ராஜதானியில் ஏதேனும் புதிய அடிஷனல் சப் கோர்ட்டுகள் ஏற்படுத்தகவர்ன்மெண்டார் உத்தேசம்செய்து கொண்டிருக்கிறார்களோ? அப்படியானால் எந்தெந்த ஸ்தலங்களில் ஏற்படுத்த உத்தேசம்செய்துகொண்டிருக்கிறார்கள், என்று சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 131. 1913ஞு நவம்பர்மாதத்தில் கூடிய சட்டசபை மீட்டிங்கில் ஆனரபில் மிஸ்டர் கே. இராமய்யங்காருக்குசொல்லப்பட்ட ஜவாப்பை ஆனரபில் மெம்பர்பார்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறார். புதிபசப்கோர்ட்டுகள் நியமிக்கும் விஷயமாக கவர்ன்மெண்டார் இப்போது யாதொன்றும் சொல்லத் தயாராயில்லை.

ஆனரபில் மிஸ்டர் பி. நரசிம்மேசுவர சர்மா.

கே. 135. செஞ்சம் கவர்னர் ஏஜண்டால் பார்லக்கிமிதியிலிருந்து எத்தனைபேர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள்? என்ன குற்றத்திற்காக தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள்? எந்த குற்றத்திற்காக தேசபிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அந்தக் குற்றத்திற்காக நியாயஸ்தலத்தில் விசாரணை நடத்தப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்? எந்த சட்டம் அல்லது ரெகுலேஷனின் ஆதாரத்தைக்கொண்டு அவர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறார்கள்? அப்படி தேசபிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிறவர்களுடைய ஜீவனத்திற்கு கவர்ன்மெண்டார் ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கிறார்களோ?

ஜ. 135. இந்தசமாசாரமே கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது. ஆனால் விசாரணை செய்வார்கள்.

ஆனரபில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார்.

கே. 137. காவேரிப்பாய்ச்சல் விஷயமாக இப்போது மைசூரில் ஆலோசனை செய்துகொண்டிருக்கும் மத்தியஸ்தர் கோர்ட்டார் ஒரு தீர்மானம் செய்வதற்குமுந்தி மைசூரில் போடப்படும் தேக்கத்தால் பாதிக்கப்படக்கூடிய தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு ஜனங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி கவர்ன்மெண்டார் உடனே ஏற்பாடு செய்வார்களா?

CO-OPERATION.

ஐக்கிய முயற்சி.

Cattle Insurance.

குறிப்புகள்.

சென்ற டிசம்பர்மாசம் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் பி. எஸ். பி. ரயிஸ் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடிய கிழச்சேரி கான்பரன்சில் ஐக்யமுயற்சி சங்கங்களின் ஸ்பெஷல் டிப்டி கலெக்டராகிய ராவ்பகதூர் ஜே. தர்ம ரெங்கராஜலு அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் கால்நடைகளை இன்ஷ்யூரன்ஸ் செய்துகொண்டு அவைகள் இறந்துபோனபின்பு இன்ஷ்யூரன்ஸ் செய்து வைத்தவர்களுக்கு குறிப்பிடப்பட்ட தொகை கொடுத்துவரக்கூடிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியமாயிருக்கிறதென்றும் அதனால் வெகு நன்மைகள் உண்டாகுமென்றும், அப்பேர்ப்பட்ட சங்கங்கள் ஸ்தாபிப்பது சாத்தியமாகாத காரியமல்லவென்றும் இந்தக் கான்பரன்ஸ் இந்தப் பிரஸ்னையையும் யோஜனைசெய்து ஆராய்ந்து கால்நடை இன்ஷ்யூரன்ஸ் சங்கங்கள் இந்த ஜில்லாவில் ஸ்தாபிக்கும்படி தீர்மானம் செய்யவேண்டுமென்றும் ஒரு பிரேரணை செய்தார்.

Agricultural Co-operation in England.

இங்கிலாண்டில் விவசாய ஐக்கிய முயற்சி.

இங்கிலாண்டின் உள்நாடெங்கும் விவசாய ஐக்கிய முயற்சி சங்கங்கள் ஸ்தாபிக்க ஒரு பெரியசங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கம் அபூர்வமான வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றது. கடந்த வருடத்தில் இம்மகாசங்கம் 456 இவை சங்கங்களை ஸ்தாபித்திருக்கின்றது. அவற்றுள் 163 சங்கங்கள் விவசாயத்திற்குத் தேவையான சாமான்களை கிரயம்கொடுத்து வாங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கோழிமுட்டை, கோழி சங்கங்கள் 38; வெண்ணெய் சங்கங்கள் 26, உபாய நிலமுடையவர்கள் சங்கம் 210; நானாவிதமான காரிய சங்கங்கள் 19; அச்சங்கங்களில் எல்லாமாகச்சேர்ந்து 37,264 மெம்பர்களிருக்கிறார்கள்; 1912-ம் வருடத்திற்கு 1,823,482 பவுன் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் மூன்றில் ஒருபாகம் விவசாயத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்குவதற்காக பத்து சங்கங்களால் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எந்த விதமாக இச்சங்கங்கள் உழைத்து சம்பாதிக்கின்றன என்பதற்கு அடியில் சில திருஷ்டாந்தங்கள் கூறுகின்றோம்:—ஈஸ்டர்ன் குடியானவர்கள் சங்கம் 278,634 பவுனுக்கு வியாபாரம் நடத்தியிருக்கிறது. தென் தேச விவசாய வியாபாரசங்கம் 121,167 பவுனுக்கு வியாபாரம் செய்திருக்கிறது. விவசாய சங்கங்களாகவிருந்த போதிலும் வியாபாரமும் செய்துவருகின்றன. பெரும்பாலும் இச்சங்கங்களின் மெம்பர்களை ஒருவருக்கொருவர் தெரியாது. இம்மாதிரி சங

சங்கள் ஐயர்லண்டு தேச சங்கங்கள் மாதிரியாக விருக்கின்றன. உபாயமான நிலமுடையவர்களுக்கு நிலம்வாங்கிக்கொடுக்ககூடிய சங்கங்கள் நம் நாட்டில் ஏற்பட்டால் உத்தமமாகவிருக்கும் என்று எண்ணுகின்றோம்.

Co-operative Credit and Municipal Scavengers at Salem.

ஐக்கிய நாணயமும் சேலம் முனிசிபாலிட்டி தெருப்பெருக்குகிறவர்களும்.

முனிசிபாலிட்டிகளின் தெருப்பெருக்குகிறவர்கள் சாவுகார்களிடம் மிகவும் கடன்பட்டுப்போயிருக்கிறார்கள். மனச்சாக்ஷிக்கும் நீதிப்புலனுக்கும் விரோதமாக மிதமிஞ்சினவட்டி கேட்கும் சாவுகார்களில் அவர்களுடைய சம்பளம் பிரதி மாதமும் பிடிக்கப்பட்டு போகின்றது. இப்போது ஐக்கியமுயற்சி சங்கங்களுக்கு அஸிஸ்டண்ட் ரிஜிஸ்டிராராக விருக்கும் மிஸ்டர் எ. வேதாசலய்யர் அவர்கள் அதற்குமுந்தி சேலம் முனிசிபாலிட்டிக்கு சேர்மேனாக விருந்தார். இவருடைய உதவியைக்கொண்டு சேலத்தில் தெருக்களைப் பெருக்குகிறவர்களுக்காக ஒரு ஐக்கியமுயற்சி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தின் விஷயங்களை மானேஜ்மெண்டு செய்துகொண்டு போவதற்கு மேற்படி முனிசிபாலிட்டியின் செக்ரேட்டரி நியமிக்கப்பட்டிருக்கிறார். உள்ளூரிலிருக்கும் ஜில்லாபாங்கில் 100-க்கு வருடத்திற்கு 7 வட்டி மேனிக்கு இந்த சங்கங்கள் மெம்பர்கள் கடன்வாங்கி சாவுகாரிகளிடம் ஏற்கனவே பட்டகடன்களைத் தீர்த்துப்போட்டார்கள். கடனுக்காக அவர்களுடைய சம்பளத்தில் மாதாமாதம் பிடிக்கப்பட்டு அவர்கள் பாங்கியிலிருந்து வாங்கின கடனுக்கு வரவு வைக்கப்படுகிறது. ஒவ்வொருமாதம் 20தேதி அவர்களுடைய சாப்பாட்டுச்செலவிற்கும் ஆடைச்செலவிற்கும் சொற்பப்பணம் 'அட்வான்சாகக் கொடுக்கப்படுகிறது. சுகதுக்க சம்பவங்களுக்கும், திருவிழாகாலங்களிலும் இச்சங்கம் அவர்களுக்குக் கடன்கொடுத்து உதவுகின்றது. இந்தசங்கம் மிகவும் நன்றாக நடந்துவருகின்றது. தெருப்பெருக்குகிறவர்கள் மிகவும் சுகமாயிருக்கிறார்கள். இச்சங்கம் ஒழுங்காகவும் சிக்கனமாகவும் மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வருகிறபடியால இதுவரையில் அது பாங்கியிலிருந்து வாங்கின கடனில் ரூ. 750 வரையில் தீர்த்துவிட்டது. பாக்கியுள்ள கடனை இன்னும் இரண்டு வருடகாலத்திற்குள் பைசல் செய்துவிடுமென்று தைரியம் கூறுகின்றது. இந்த சங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்குமுந்தி சாவுகார்கள் இவர்களை இவர்களுடைய கடனை வசூல் செய்வதற்காக சாவுகார்கள் மிகவும் கொடுமையாக நடத்துவதுண்டு. இவர்களுடைய கடன் மிதமிஞ்சிப்போயிருந்தாலும் சரி அல்லது சாவுகார்கள் மிகவும் கொடுமையாக நடத்தினாலும் சரி தெருப்பெருக்குகிறவர்கள் இவைகளுக்கஞ்சி ஊரைவிட்டு ஓடிப்போய் விடுவார்கள். முனிசிபாலிட்டி தெருக்களைப் பெருக்கும் வேலைகெட்டுப்போவதுண்டு. இவ்வகை வேலைக்காரர்களுக்குச் செய்யப்பட்டிருக்கும் இன்னொரு நன்மை என்னவென்றால், முனிசிபாலிட்டியாரால் சுகாதாரமான குடிசைகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக கவர்ன்மெண்டார் முனிசிபல் கவுன்சிலுக்கு இனாமாகப் பணம் கொடுத்துவருகிறார்கள். இவர்கள் இதற்குமுந்தி ஆதாரமற்ற குடிசைகளில் இருந்து வருவதுண்டு. ஒவ்வொருநகரத்தின் க்ஷேமமும் அதில் செய்யப்பட்டிருக்கும் சுகாதார ஏற்பாடுகளைப் பொருத்ததாக யிருக்கிறது. சில்லரை சிப்பந்திகள் திருப்தியடைந்து வேலை செய்யும்படியாகச் செய்தாலொழிய நகர ஜனங்களுக்குச் சுகம் உண்டாகமாட்டாது. மற்ற முனிசிபாலிட்டிகளும் சேலம் முனிசிபாலிட்டியின் ஏற்பாட்டை பின்பற்றுமென்று நம்புகிறோம்.

Madras Government Servants' Co-operative Society, Limited.

மதிராஸ் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் ஐக்கிய நாணய சங்கம்.

சென்னை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் ஐக்கியநாணய சங்கத்தினுடைய 1912-13-ம் வருடத்தினுடைய பரிசோதகர் ரிப்போர்ட் வெளிவந்திருக்கிறது. இச்சங்கத்தின் கணக்குகள் வேலூர் அசிஸ்டண்ட்ரிஜிஸ்டிராரால் பரிசோதனை செய்யப்பட்டது. மூன்று ஸ்டேட்டுமெண்டுகள் அவரால் கொடுக்கப்பட்டிருக்கின்றன:—(1) வரவுகணக்கு (2) செலவுகணக்கு (3) லாபநஷ்டக் கணக்கு வரவேண்டிய வகையும் செல்லுவகையும் பிரஸ்தாப வருடத்தில் இச்சங்கம் ரூ. 1040-11-11 அசல் லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொகையின் நான்கில் ஒருபாகம் அதாவது ரூ. 260-3-0 பிரத்தியேக நிதியில் சேர்த்துவைக்கப்படும். இந்தத்தொகையை மதிராஸ் சென்டிரல் அர்பன் பாங்கில்போட்டு முடக்கிவைக்கும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளப் படுகிறது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடைய நன்மைக்காக இந்தச்சங்கந்தான் முதல் முதலில் சென்னை ராஜதானியில ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் பல ஆபீசுகளிலிருக்கும் உத்தியோகஸ்தர்கள் அதில் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். மெம்பர்களுக்கு கடன்கொடுக்கும் விஷயத்தில் டைரெக்டர்கள் மிகவும் ஜாக்கிரதையாக யோஜனைசெய்து கடன்கொடுக்கும்படி உத்திரவு செய்கிறார்கள். பெரும்பாலும் ரூ. 50 சம்பளமும் அதற்கு குறைவான சம்பளமுடைய உத்தியோகஸ்தர்கள்தான் இச்சங்கத்தில் கடன்வாங்கிக் கொள்ளுகிறார்கள். இம்மாதிரியாக பரிசோதகருடைய ரிப்போர்ட் திருப்திகரமாக யிருப்பதைப் பற்றி ஐக்கியமுயற்சி இலாக்கா ரிஜிஸ்டிரார் சந்தோஷப்படுவதுடன் டைரக்டர்களுடையவும் செக்ரேட்டரி மிஸ்டர் S. கிருஷ்ணமாச்சாரியார் பி எ. அவர்களுடைய சிலாக்கியமான மானேஜ்மெண்டில் சங்கம் விருத்தியாம்சம் காட்டுகிறதென்று ரிமார்க்கு செய்திருக்கிறார்.

Madras Co-operators' Deputation To H. E. The Viceroy.

சென்னை ஐக்கியமுயற்சி சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு வைசிராய் சொன்ன பதில்.

கனவான்களே! ராஜவிசுவாசம் பொருந்திய உங்களுடைய அட்டிரசைப் பெற்றுக்கொள்ளுவது எனக்கு மிக சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. சென்னைராஜதானியில் ஐக்கிய முயற்சி ஏற்பாட்டின் உற்பத்தி மிகவும் திருப்திகரமாக விருக்கிறது. இன்னும் அபிவிருத்தி செய்யப்பட்டால் நல்லபயனைக் கொடுக்குமென்பதற்குத் தகுந்த அறிகுறிகளிருக்கின்றன. இந்த ராஜதானியில் இம்முயற்சிவிருத்தி அடைந்திருப்பது மிகவும் சந்தோஷமாக யிருக்கிறது. ஏனெனில் இந்தியாவில் ஐக்கியமுயற்சிக்கு விதை போட்டவராகிய சர் பிரடரிக் நிக்கல்சன் சென்னைப்பட்டணம் ஆபிசர்; இம்முயற்சி மிகமுக்கியமானதென்றும்; என்னபயனை இப்போது கொடுத்துக்கொண்டுவருகிறதென்றும், இனி இந்தியாவில் விவசாயர்களுக்கு என்ன பயனைக்கொடுக்கப்போகிறதென்றும் எனக்கு நன்றாயத் தெரியும். பொது நல ஊக்கத்துடன் அம்முயற்சியில் கலந்துகொண்டு உழைத்துவரும் உங்களுடைய பிரயத்தனங்கள் கவர்ன்மெண்டாருடைய ஆதரிப்பையும் கவனத்தையும்பெறத் தவறிப் போகமாட்டாது என்று நான் உறுதியாய்ச்சொல்லுகிறேன்.

A Circular.

ஒரு சுற்றுத்தரவு.

ஐக்கியமுயற்சி இலாகா பத்திரங்கள் ரிஜிஸ்டிரார் ஆபீசில் சீக்கிரமாக ரிஜிஸ்டர் செய்யப்படும்படியாகவும், ரிஜிஸ்டிரேஷன் செலவுகள் கம்மியாக விருக்கும்படியாகவும் காருண்யம் பொருந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சில கோவாப்பரேட்டிவ் சங்க பிரசிடெண்டுகளும் காரியதரிசிகளும் கவர்ன்மெண்டார் ஐக்கியமுயற்சி முன்னுக்குவரவேண்டுமென்கிற நன் நோக்கத்துடன் செய்திருக்கும் இந்த ஏற்பாட்டைப் பிரயோகப்படுத்தி கோவாப்பரேட்டிவ் சங்கங்களுக் கல்லாத காரியங்களுக்கும் அந்த சாதகமான ஏற்பாட்டைப் பிரயோகப்படுத்தும்படி சப்ரிஜிஸ்டிரார்களை கேட்டுக்கொள்ளுகிறதாகத் தெரியவருகிறதென்று கோவாப்பரேட்டிவ் ரிஜிஸ்டிரார் விசனப்படுகிறார்.

Elimination of Middleman.

நடுமனிதனை நீக்கவேண்டும்.

ஐக்கிய முயற்சியின் தாத்பரியம் என்னவென்றால் அனுவசியமான ஒவ்வொரு நடுமனிதனையும் நீக்கிப்போடவேண்டுமென்பதே. ஐக்கியமுயற்சி சங்கத்தில் அனுவசியமாக எண்ணப்படும் ஒவ்வொரு நடுமனிதனும் கலரயாளாக எண்ணப்பட வேண்டியதே ஒழிய மற்றபடி வேறில்லை. அப்பேர்ப்பட்ட நடுமனிதனை நீக்கிப்போடுவதுதான் ஒவ்வொரு சங்கத்தின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். அவனை எப்படி நீக்குவதென்பதை ஐக்கிய இயக்கம் போதிக்கின்றது. ஐக்கிய முயற்சியின் முக்கிய கொள்கை என்னவென்றால் அவசியமாக எண்ணப்படும் ஒவ்வொரு நடுமனிதனும் போதுமானபடியும் கௌரவமாகவும் பரிகாசஞ் செய்யப்பட வேண்டும். உற்பத்தி செய்கிறவனுக்கும் அந்தப்பொருளை வாங்கிச் சாப்பிடுகிறவனுக்கு இடையிலுள்ள அனுவசியச் செலவுகள் நீக்கப்பட்டுப் போகவேண்டுமென்பதையும் போதிக்கின்றது என்று கனந்தங்கிய பம்பாய் கவர்னர் 19-9-1913-ல் பூனாவில் கூடிய பம்பாய் மாகாண காண்பான்ஸில் சொன்னார்.

Co-operative Housing Associations.

குடிக்கூலிவீடு சபளை செய்யும் ஐக்கிய சங்கம்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் பூனாவில் கூடிய பம்பாய் மாகாண ஐக்கிய முயற்சி சங்கத்தில் மிஸ்டர் B. W. கிசான் ஐ. சி. எஸ். நகரவாசல்களில் வீடுகளின் வாடகை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருகிறபடியால் நடுத்தர வகுப்பாருடைய சம்பார்த்தனைக்குப் பொருந்தினதாயில்லை என்றும் இந்த கஷ்டத்தை நீக்கும் பொருட்டு இங்கிலாண்டில் ஏற்பட்டிருக்கும் கூட்டுபாகஸ்தர்களுடைய (Co-Partnership Societies in England) சங்கங்கள் போல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வீட்டு வாடகையைக் குறைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று பிரரேபித்தனர்.

The Credit Systems in The Madras Presidency.

சென்னை இராஜதானியின் லேவாதேவி ஸ்தாபனங்கள்.

இந்த இராஜதானியில் பொதுவாகக் கிராமங்களில் கிருஷிகரே ஒருவருக்கொருவர் லேவாதேவி நடத்திக்கொள்ளுகிறார்கள். சென்னையிலும் மற்றப் பெரிய பட்டணங்களிலும் பாங்கிகளும் மார்வாடிகளும், சாவுகார்களும் செட்டிகளும் லேவாதேவி நடத்துகிறார்கள். கிராமாந்தரங்களில் சாதாரணமாகக் கிருஷிகரே மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். ரிஜிஸ்திரேஷன் இலாகா கணக்குகளைப் பரிசோதித்ததில் சில வருஷங்களுக்கு முன் ஒத்தி அடமானங்களின்மேல் கொடுக்கப்பட்ட

கடன்களில் மூன்றில் இரண்டு கிருஷிகரால் கொடுக்கப்பட்டதென்றும், வெண்கடன் பத்திரங்களின்மேல் கொடுக்கப்பட்ட கடன்களில் அதற்கதிகமாகவே கிருஷிகரால் கொடுக்கப்பட்டனவென்றும் தெரியவந்தது. ஆனால் இது எல்லா ஜில்லாக்களிலும் ஒரே ரீதியாய் இருக்கவில்லை. ஒத்தி அடமானங்களின்மேல் கொடுக்கப்பட்ட கடன்களில் திருநெல்வேலி ஜில்லாவில் 100-க்கு 84 கிருஷிகரால் கொடுக்கப்பட்டது. அனந்தபூர் ஜில்லாவிலோ 100-க்கு 35 தான் கிருஷிகரால் கொடுக்கப்பட்டது. 83,000 கடன் பத்திரங்கள் ரிஜிஸ்தரானவைகளைப் பரிசோதித்ததில் மேற்கண்ட விவரங்கள் தெரியவந்தன. ரிஜிஸ்தராகாத பத்திரங்களின் மேல் வாங்கின கடன்கள் இன்னும் அதிகமாயிருக்கலாம், பத்திரங்களே எழுதாமல் நகையீட்டின் மேலும் வாக்குறுதியின் மேலும் கைக்கணக்குகளின் ஆதாரத்தின்மேலும் கொடுக்கப்பட்ட கடன்கள் இன்னும் எத்தனை மடங்கு அதிகமோ! இவைகளைத் தவிர தானிய வட்டிக்குக் கொடுக்கப்படும் தானியக் கடன்கள் முழுவதும் கிருஷிகராலேயே கொடுக்கப்படுகிறது. இவ்விஷயத்தை நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். அதாவது நமது இராஜதானியில் சிற்சில இடங்களில் செட்டிகளும், மார்வாடிகளும், சாவுகாரிகளும், காசுக்கடை, உண்டியல் கடைக்காரரும் கொடுப்பதைத் தள்ளிமற்றதைக் கவனித்தால் முக்கியமாகக் கிருஷிகருக்குக் கொடுக்கப்படும் கடன்களெல்லாம் மற்றக் கிருஷிகராலேயே கொடுக்கப்படுகின்றன.

ஒத்தி அடமானம் இவைகளின்மேல் சுமார் 5,00,000 கடன்கள் வருஷா வருஷம் ரிஜிஸ்தர் பத்திரங்களின் ஆதாரத்தில் கொடுக்கப்படுகின்றன. இவைகளில் பாதி 100-ரூபாய்க்கு மேற்பட்ட கடன்கள். மற்றப்பாதி 100-ரூ க்குக் கீழ்ப்பட்டன. இவைகளில் சில ஒத்தியின் மேல் கொடுக்கப்பட்ட கடன்கள் செலுத்தவதற்கு ஏற்பட்ட வாய்தா சுமார் 5-வருஷத்துக்கு மேற்பட்டதாகவே வெளியாகிறது. அடமானத்தின்மேல் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு வாய்தா இரண்டு அல்லது மூன்று வருஷம் என்று தெரியவருகிறது. வருஷா வருஷம் இவ்விதமாக மொத்தத்தில் ரிஜிஸ்தர் தஸ்தாவேஜுகளின்மேல் வாங்கப்பட்ட கடன் தொகை சுமார் 7-கோடி ரூபாய்க்குமேல் ஆகிறது. இப்படியே ஒரு வருஷத்தில் கொடுபடாமல் பாக்கியிருக்கிற மொத்தக் கடன்தொகை சுமார் 21 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. இதைத் தவிர கைக்கடனாகக் கொடுக்கப்படும் சிறு தொகைகளின் மொத்தம் எவ்வளவென்று கணக்கிட முடியாது. இந்தத் தொகைகள் சில பாகம் செலுத்தப்பட்டும் மறுபடியும் வேறு தொகைகள் வாங்கப்பட்டும் இப்படியே தொடர்ச்சியான லேவாதேவியாகவும் இருக்கும். இப்படிக் கைக்கணக்குகளின்மேல் கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் சுமார் 10 கோடி ரூபாய்க்கு அதிகமாய் இருக்கலாமென்று ஊகிக்க இடமிருக்கிறது.

அனேக விடங்களில் ஏழைக் கிருஷிகர் குடும்ப காலக்ஷேபத்துக்காகவும் விதைக்காகவும் தானியம் கடன் வாங்குகிறார்கள். அதை வட்டி வாசியுடன் சேர்த்து மாசூல் அறுவடை காலத்தில் செலுத்த ஒப்புக்கொள்ளுகிறார்கள், இப்படி வாங்கப்படும் தானியக் கடன் எவ்வளவு என்று நிதானிக்க முடியவில்லை. மேற்சொன்ன மூன்று விதக் கடன்களும் மாசூல் அறுவடை காலத்தில் செலுத்தி விடக்கூடும் என்னும் தைரியத்தின்மேல்தான் கிருஷிகர் வாங்குகிறார்கள். அப்படியே சிலர் அனேகமாய்ச் செலுத்தியும் தீர்க்கிறார்கள். என்றாலும் அனேகர் அப்படித் தீர்க்க சக்தியற்றவர்களாயும் இருக்கிறார்கள். சிலர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடன் வாங்கும் துர்வழக்கத்தினாலேயே கடன் வாங்குகிறார்கள். இப்படிச் செய்வது மிகவும் கெட்டது. வட்டிவாசி

அதிகமாய் ஏற்பட்டும், கடன் தீர்க்கும் வாய்தா கடன் பெறுபவருடைய சௌகரியத்துக்குத் தக்கதாயும் இல்லாவிட்டால், அவன் குடி முழுகிப்போக ஏதுவுண்டாகும்.

மேற்சொன்னபடி சோதித்த பத்திரங்களிற் கண்டவட்டி தாரணை மிகவும் அதிகமென்றே தெரியவருகிறது. நில அடமானத்தின்மேல் கொடுக்கப்பட்ட ரூ. 100-க்கு மேற்பட்ட கடன்களில் 100-க்கு 65 கடன்கள் வருஷத்திற்கு 100–க்கு 12 வட்டி ஏற்படுத்தப்பட்டிருந்தது. ரூ. 100.க்குக் குறைந்த கடன்களில் 100-க்கு 62 கடன்களிலும் மேற்சொன்னபடி ஒரு வட்டியே கண்டிருந்தது. கடப்பை ஜில்லாவில் வட்டித்தாரணை இதற்கும் அதிகம் எனத் தெரியவருகிறது. பொதுவாக நில அடமானத்தின்மேல் கொடுக்கப்படும் கடன்களில் முக்கால் முதல் ஒன்றரை வட்டி ஏற்பட்டிருக்கிறது. வெண் கடன் பத்திரங்களின் ஆதாரத்தின்மேல் கொடுக்கப்படும் கடன்கள் விஷயத்தையும் சிவில் கோர்ட்டு வியாஜ்ய சம்பந்தமான 3000 கேஸ்களின் ரிக்கார்டுகளைப் பரிசோதித்ததில் மேற்கண்ட வட்டி.தாரணையே பொதுவாக ஏற்பட்டிருக்கிறதாக வெளியாயிற்று. தானிய வட்டிக்குக் கிருஷிகர் கொடுக்கும் கடன்களில் அறுவடை காலத்தில் கால்வாசி கூட்டிக்கொடுக்க வேண்டும் என்னும் நிபந்தனை ஏற்பட்டதாக வெளியாகிறது. ஆனால் வியாபாரிகள், தரகரிகள் முதலானவர்களிடத்திலிருந்து தானிய வட்டிக்குக் கிருஷிகர் கடன் வாங்கும்போது அவர்கள் ஏற்படுத்தும் வட்டி இவ்வளவுதான் என்று குறிப்பிட முடியாது. அவசரத்துக்குத் தக்கதாக வட்டி தாரணையை எம்மட்டும் அதிகப்படுத்தக் கூடுமோ அம்மட்டும் அவர்கள் அதிகப்படுத்தி இலாபம் சம்பாதிப்பார்கள். சாகுபடி காலத்தில் கிருஷிகருக்குத் தானியம் கடன் கொடுத்து அறுவடை காலத்தில் பணமாக வட்டியும் முதலும் கொடுக்கவேண்டுமென்னும் ஏற்பாடு சில வியாபாரிகள் செய்வதும் உண்டு. அப்படிச் செய்யும்போது கடையில் விற்கும் விலைக்கு சற்று அதிகமாகக் கடன் கொடுத்த தானியத்துக்கு விலையேற்படுத்தியும் வட்டி தாரணையும் உயர்த்தியும் மாசூல் காலத்தில் தானியமாகக் கொடுத்தால் அதற்குக் கடையில் விற்பதற்குச் சற்று குறைவாகக் கிரயதாரணை ஏற்படுத்தியும், அளவு வித்தியாசத்துக்காகவும் பாடுவாசிக்காகவும் என்று கொஞ்சம் அதிகமாகவே அளந்தும் இப்படி அனேக விதங்களில் கிருஷிகரின் பணத்தை வியாபாரிகள் கொள்ளையிடுகிறார்கள்.

கிருஷிகர் வாங்கும் கடன் தொகைகள் ஒவ்வொன்றும் எவ்வளவென்று கணக்கைப் பரிசோதித்துப் பார்த்ததில் அநேகமாய் சொற்பத் தொகைகளே கடன் வாங்கப்படுவதாக தெரிகிறது. அனேக கடன்கள் ரூ. 25-க்குக் குறைந்தும், சிலசராசரியில் ரூ. 45-க்கு உட்பட்டும் இருக்கின்றன. பேரேட்டுக் கணக்கின்மேல் கொடுக்கப்படும் கடன்கள் ஒவ்வொன்றும் வருஷத்துக்கு 20–க்கு அல்லது 30-ரூபாய்க்குட்பட்டதாகவே இருக்கிறது. வருஷா வருஷம் கிராம முன்சிபு கோர்ட்டுகளில் 20-ரூபாய்க்குக் குறைந்த கடன்கள் சம்மந்தமான சுமார் 50,000 வழக்குகள் பைசலாகின்றன. கிராமப் பொது ஜனங்களால் பைசல் செய்யப்படும் வழக்குகளுக்கோ கணக்கில்லை. முன்சிபு கோர்ட்டுகளில் செய்யப்படும் வழக்குகளும் அநேகமாக 20-ரூபாய்க்குக் குறைவான கடன்களைப் பற்றிதான் என்று வெளியாகிறது. 50-ரூபாய்க்கு அதிகப்பட்ட கடன்கள் சொற்பத்தான். அதிலும் 100 அல்லது 500 ரூபாய்க்குப் போகும் கடன்களோ மிகவும் சொற்பமாகவே இருக்கும். பொதுவாக முக்காற் பங்குக் கடன்கள் 50-ரூபாய்க்குக் குறைந்ததாகவே யிருக்கும்.

வியாபாரி இடத்திலும் செட்டியிடத்திலும் சாவுகாரி இடத்திலும் காசுக்கடை உண்டியல் கடைகளிலும் கடன் வாங்குவதைவிடக் கிருஷிகரிடத்தில் கடன் வாங்குவது நலம் என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் எல்லாருக்கும் இருக்கிறது. இது ஒரு வகையில் சரியென்பது நமது அபிப்பிராயம் ஒரு கிருஷிகன் மற்றொருவனுக்குக் கடன் கொடுத்தால் கடன் வாங்குகிறவனுக்கு உதவி செய்வதுடன் தனக்கும் வட்டி வருமானம் கிடைக்கிறது என்னும் நோக்கத்துடனிருப்பான். சில விடங்களில் கடன் வாங்குகிறவர்கள் தங்கள் வருதிக்குள்ளடங்கி நடப்பார்கள் என்னும் நோக்கமும் கடன் கொடுக்கும் சிலருக்கிருக்கலாம். வியாபாரிகளுக்கோ அப்படியல்ல வட்டி இலாபத்தை எவ்வளவுக்கு அதிகப்படுத்தக் கூடுமோ அவ்வளவுக்குக் கொஞ்சமும் கூசாமல் அதிகப்படுத்துவார்கள். ஒருவன் கைதாழ்ந்துபோனால் அவனைக் கைதூக்கிவிடாமல் அதுதான் சமயம் என்று அவன் சொத்தை அபகரித்துக்கொள்ளப் பார்ப்பார்கள். இதன் உண்மையைப்பற்றி சந்தேகப் படுகிறவர்கள் தற்காலம் லேவாதேவி செய்யும் வியாபாரிகளுக்கும் செட்டிகளுக்கும் முன் எவ்வளவு நிலம் இருந்தது என்பதையும், இப்போது எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதையும், அந்த நிலங்களை அவர்கள் சம்பாதித்த வகையையும் ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

பருத்தி பயிரிடும் குடிகளும், பனைவெல்லம் செய்யும் குடிகளும், கரும்பு பயிரிடும் குடிகளும் தங்கள் செலவுக்கு வேண்டும் பணத்தை வியாபாரிகளிடத்திலும் தரகர்களிடத்திலும் பெற்றுக்கொண்டு தங்கள் மாசூலை அவர்கள் கையில் ஒப்புவித்துவிட்டுத் தங்கள் காலக்ஷேபத்துக்கு மறுபடியும் அவர்களிடத்திலேயே கடன்வாங்கி மிகவும் கஷ்ட நஷ்டத்தை அநுபவிக்கிறார்கள் பருத்தி பொதி ஒன்றுக்கு அப்போது விற்கும் விலைக்கு ரூ 3 குறைத்து இந்த வியாபாரிகளும் தரகர்களும் கொடுக்கிறார்கள் என்பது அந்தக் கிருஷிகருக்குத் தெரியும். என்றாலும் அந்த ஏழை ஜனங்கள் என்ன செய்வார்கள்! கடனில் கட்டுப்பட்டு அதிலிருந்தும் தலை தூக்கி மேல் வர மார்க்கம் காணாமல் தவிக்கிறார்கள்.

வண்டிமாடுகளும் கவலைக் காளைகளும் உழவு எருதுகளும் கிருஷிகருக்கு வேண்டியிருக்கும் போது ரொக்கம் கொடுத்து வாங்க அசகதர்களாய் நாலைந்து வருஷ வாய்தாவில் வட்டியுடன் சேர்த்துக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு 100—ரூ. விலை மதிப்புள்ள கால்நடைகளுக்கு ரூ. 150 கிரயம் பேசி வாங்கிக்கொள்ளுகிறார்கள். இது கடப்பை முதலான வட ஜில்லாக்களில் சகஜமாய் நடந்துவருகிறது.

காப்பித் தோட்டங்களில் வேலைக்குப் போகும் கூலியாட்களுக்கும் மற்றக் கிருஷி வேலையாட்களுக்கும் குளிர் காலத்தில் அணிந்துகொள்ளக் கம்பிளி உடுப்புகள் தைத்துக் கொண்டு சில வியாபாரிகள் தென் ஜில்லாக்களிலுள்ள அநேக ஊர்களுக்குப் போய் அவைகளைக் கடனுக்கு விற்றுவிட்டு மாசூல் அறுவடை காலத்தில் அந்தந்த ஊர்களுக்குப் போய்க் கிரயம் வசூல்செய்யும் வழக்கம் இருக்கிறது. அப்படி விற்பவர்களைப் பொதுவாய் "வாய்தாக்காரர்" என்று சொல்வார்கள். உடுப்பின் விலை ஒரு ரூபாயானால் அவர்கள் வசூல் செய்வது இரண்டு ரூபாய்கள். இப்படிக் கிருஷிகர் ஏன் அதிகத் தொகை கொடுக்கிறார்களென்றால் அந்த சமயத்தில் அவர்களிடத்தில் உடுப்பு வாங்கப் பணமில்லை. ஆனால் எப்படியாவது வாங்கிவிட்டுக் கையில் காசுவந்தபோது கணக்கில்லாமல் செலவழிக்கிறார்கள்.

ஏழைக்குடிகள் கடைகளிலும் தங்களுக்கு வேண்டிய சாமான்களைக் கடனுக்கு வாங்கிப்

பின்னால் பணமாகவோ தானியமாகவோ அதிகமாகவோ அதிக வட்டி வாசி கூட்டிச் செலுத்துகிறார்கள். இதுவும் அநியாயமாயிருக்கிறது.

வாயிதாவில் வட்டியுடன் செலுத்தப்படாத ஒரு கடன் சில வருஷங்களில் இரட்டிப்புக் கடனாகிறது. இன்னும் சில வருஷங்கள் போனால் நான்கு மடங்காகும். அப்பால் அதன் பெருக்குக்கு அளவுமட்டில்லை. தற்காலம் கிருஷிகருக்குக் கடன் கொடுக்கும் மனிதரில் அநேகர் அவர்களுக்கு உபகாரிகளல்ல விரோதிகளென்றே சொல்லவேண்டும். அவர்கள் கொடுக்காவிட்டாலும் கிருஷிகர் ஜீவனம் நடத்த முடிகிறதில்லை. அப்படி வாங்கினாலும் கஷ்டமாயிருக்கிறது இதையெல்லாம் உத்தேசித்து ஒவ்வொரு கிராமத்திலும் கிருஷிகருக்கு வேண்டும் கடன்களைச் சொற்ப வட்டிக்குத் தடையில்லாமல்கொடுத்து அவர்கள் சௌகரியப்படி வசூல் செய்து கொள்ளக்கூடிய சங்கங்களும் நிதிகளும் ஸ்தாபிக்கப்படவேண்டிய தவசியம்.

கிராமாந்தரங்களில் நிலஒத்தி அடமானங்களின் மேல் கொடுக்கப்பட்ட கடன்கள் சராசரியில் ஒரு வருஷத்துக்கு 20 கோடி ரூபாய் இருக்கலாம். தஸ்தவேசு ரிஜிஸ்தர் செய்யப்படாத வெண்கடன்களும் கைக்கடன்களும் சுமார் 15 கோடி என்று மதிக்கலாம். தானியக்கடன்களின் மதிப்பு சுமார் 10 கோடி ரூபாய் என்று சொல்லலாம். ஆக மொத்தத்தில் இவ்விராஜதானியிலுள்ள கிருஷிகர் வருஷா வருஷம் மாசூல் அறுவடை காலத்தில் செலுத்த வேண்டி கடன் தொகை சுமார் 45 கோடி ரூயாய் என்று கணக்காகிறது. இவ்விராஜதானியிலுள்ள கிருஷிகரின் ஜனத்தொகைக்கு இந்தக் கடன் தொகையை ஈவிட்டுப் பார்க்கும்போது ஒவ்வொரு நபருக்கும் சராசரியில் ரூ. 13 கடன் ஏற்படுகிறது. இதை நினைக்க நமக்கு துயரமுண்டாகிறதன்றி வேறல்ல. என்றாலும் மற்ற தேசங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது அதிகம் என்று நினைக்கக்கூடாது. ஆனால் ஒரு விஷயம் நாம் கவனிக்க வேண்டியது மற்ற தேசங்களில் கடன் தொகைகளுக்கு ஏற்படும் வட்டி வாசியும் இத்தேசத்தில் ஏற்படும் அயன் வட்டியும் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது கிருஷிகரின் கதி மிகவும் பரிதபிக்கத்தக்கதாகத்தான் இருக்கிறது. கிருஷிகர் இவ்விஷயத்தை நன்றாய் மனதில்பதித்து அதிலிருந்து தலைதூக்கி மேல் வரவேண்டுமென்றும் தீர்மானத்துடன் சுறுசுறுப்போடு உழைத்து செட்டால்க் காலக்ஷேபம்செய்து சம்பாத்தியத்தில் சில பாகத்தை மீந்து வைத்தாலொழிய இந்தக் கடன் அவர்களைப் பாதாளத்தில் தாழ்த்திவிடப் போதுமானதுதான் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. சராசரியில் எல்லாக் கடன்களுக்கும் $1\frac{1}{4}$-வட்டிவிதம் கணக்கிட்டால் 45 கோடி ரூபாய்க்கு ஒரு வருஷத்துக்கு வட்டி ரூபாய் $6\frac{3}{4}$-கோடி ஆகிறது. அத்துடன் முத்திரைக்கடுதாசி வாங்கவும் பத்திரம் ரிஜிஸ்தர் செய்யவும், வியாச்சியச் செலவுகளும் இவை முதலான சில்லரைச்செலவுக்கு ஏற்படும் கடன்தொகை சுமார் 2-கோடி. ஆகலாம். இவ்விதத்தில் குறைந்தது 8-கோடி ரூபாய் வருஷா வருஷம் கடன்களுக்காக வட்டிமுதலிய பாவத்துகளுக்குச் செலுத்தவேண்டிய சுமை கிருஷிகரின்மேல் ஏறுகிறது. வட்டி விதம் $1\frac{1}{2}$ ஆகக் கணக்கிட்டாலோ இந்த வருஷாந்திரச்சுமை 10-கோடி ரூபாயாகிறது. சில கடன்களுக்கு $1\frac{1}{2}$-வட்டியும் சில கடன்களுக்கு $1\frac{1}{2}$-வட்டியுமாக வைத்துக்கொண்டால் இந்த வருஷாந்திரச்சுமை சுமார் 9-கோடி ரூபாயாகிறது. இவ்விராஜதானியில் கிருஷிகருக்கு வருஷாவருஷம் கிடைக்கும் மாசூலின் கிரையம் சுமார் 60-கோடி ரூபாயாக மதிக்கலாம். இந்தத் தொகைக்கு மேற்சொன்ன வட்டிச்சுமையாகிய 9-கோடி ரூபாய் 100-க்கு 15-விதம் ஆகிறது. கடன் தொகையில் மொத்தமாகிய 45 கோடி ரூபாய் மாசூலில் 100-க்கு 15-பாகம் வட்டிக்கு வருஷா வருஷம் கிருஷிகர் கொடுத்

துவிட்டால் அப்பால் முதல்தொகை செலுத்துவதெப்போ? வருகிற மாசூலில் முக்கால்பகுதியாவது கிருஷிகரின் குடும்பகாலக்ஷேபத்துக்கும் பயிர்ச்செலவுக்கும் வேண்டாமா? அப்படி 45-கோடி ரூபாய் குடும்பகாலக்ஷேபத்துக்கும் பயிர்ச்செலவுக்கும் 9-கோடி ரூபா வட்டிக்கும் கொடுத்துப்போக மீதி வருஷம் ஒன்றுக்கு முதலுக்குச் செல்லுவைக்க கூடியது சுமார் 6-கோடி ரூபாய்தான் ஆகிறது. இவ்விதமாகக் கட்டுதிட்டத்தோடு பழைய கடனைத் தீர்ப்பதற்கே 10-வருஷமாய் விடும். இதன் மத்தியில் ஒரு வருஷம் விளைவில்லாமல் தீவானாலும், அல்லது மழைக்குறைவால் மணி பிடியாய்ப்போனாலும், கலியாணம் முதலான எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் கடன்தீர இன்னும் 10-வருஷகாலமாய்விடும். ஆகையால் இப்போது வருஷாவருஷம் வட்டிக்குச் செலவாகும் 9-கோடி ரூபாய் $4\frac{1}{2}$-கோடியாகக் குறைந்தால கடன் பாரம் கிருஷிகருக்குச் சற்று லகுவாகும் $1\frac{1}{2}$-வட்டியை அரையேயரைக்கால் வட்டியாக மாற்றினாலொழிய இந்தப்பாரம் குறையாது. மேலும் கொள்வார்க்கும் கொடுப்பார்க்கும் மோசமில்லாமல் கடன்கள் கொடுபடவேண்டும் இதுவன்றி இருக்க இருக்க பழைய கடன்களைத் தீர்த்துக்கொண்டிருக்கும்போதே நிலத்திலிருந்தும் மற்ற வகையான தொழில் முயற்சிகளிலிருந்தும் அதிக வருமானம்வரும் விதமாய் விர்த்திசெய்வதற்கே கடன்களைக் கொடுக்கவேண்டும். அவசியமில்லாமல் ஒருகாலும் கடன் வாங்கக்கூடாது. எப்படியாவது சிரமப்பட்டு கையைக்கட்டி, காலைக்கட்டி, வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி வருஷவருஷம் கொஞ்சம் மீத்துவைக்கும் நற்பழக்கத்தை விருத்திசெய்ய எல்லாருக்கும் போதிப்பதுடன் அப்படிச்செய்பவர்களுக்கே கடன் முதலிய உதவி செய்யவேண்டும்.

சென்னையிலும் சில பட்டணங்களிலும் சில பெரிய கிராமங்களிலும் திரவியசகாய சங்கங்கள் சில வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தினார்கள். அவைகளில் அனேகம்கூட்டுச் சீட்டுச் சங்கங்களாகவும், அனேகம் ஏலச்சீட்டு சங்கங்களாயும் இருக்கின்றன. மேலும் மாதா மாதம் அல்லது மூன்று மாதத்துக்கொருமுறை என்றிப்படிக் குறிப்பிட்ட வாய்தாக்களில் சந்தாபணம் கட்டிக்கொண்டேயிருக்கவேண்டும். இப்படிக் கிருஷிகரால் செய்ய முடியாது. சர்க்கார் உத்தியோகஸ்தரும் வியாபாரிகளும் மாதா மாதம் சம்பளம் வாங்கும் மற்ற வேலைக்காரரும் மட்டும் இவ்வித நிதிகளால் பயனடையக்கூடியவர்களாயிருக்கிறார்கள். சில சாஸ்வத நிதிகளின் நிபந்தனைகளை இங்கு சற்று சுருக்கி யெழுதுவோம். அந்த நிதியில் சேரும் அங்கத்தினர் பங்கு ஒன்றுக்கு மாதந்தோறும் ரூ. 1 செலுத்தவேண்டும். இப்படி 45 அல்லது 84 மாதங்களுக்குச் செலுத்திக்கொண்டே வந்தால் அந்தக் காலவரையளவில் வட்டி கூட்டி முறையே ரூ. 50 அல்லது ரூ. 100 அவர்களுக்குக் கொடுக்கப்படும். இப்படி கொடுக்கப்படுவது மத்தியில் நிதியிலிருந்து யாதொரு கடனும் வாங்காமல் சந்தாத்தொகை மாதம் செலுத்தி வந்தவர்களுக்குத்தான். அப்படிக்கின்றி அவசரநிமித்தம் 45 மாதத்துக்கு ரூ. 1 விதம் செலுத்த உடன்பட்ட ஒருவர் ஐந்தாறுமாதங்களுக்கு சந்தாத்தொகை செலுத்தியபின் நிதியிலிருந்து ரூ. 50 கடன் வாங்கிக்கொண்டால் அவர் முன் செய்த உடன்படிக்கைப்படியே 45 மாதத்துக்கு சந்தா செலுத்திக்கொண்டேயிருக்கவேண்டும் அந்த வாய்தா முடிவில் அவர் வாங்கிய கடன் தொகை முழுவதும் செலுத்தித் தீர்ந்துபோகும். இவ்விதமாகக் கடன் வாங்குவோருக்கு மிகவும் சௌகரியமே. ஆனால் சந்தாத்தொகை மாதமாதம் செலுத்தவேண்டும் என்னும் நிபந்தனையை மாற்றி வருஷத்துக்கு இரண்டுமுறை

செலுத்தவேண்டுமென்று ஏற்படுத்தியும் வாய்தாவை சற்று அதிகப்படுத்தியும் ரூல்கள் ஏற்படுத்தினால் மெத்த நலமுண்டாகும்.

அப்படிச் செய்தாலுங்கூட இந்த நிதிகளிலிருக்கும் குறை யென்னவெனில் (1) அவைகளுக்கு உள்ள ரொக்கமுதல் எல்லா மெம்பர்களால் செலுத்தப்பட்ட பங்குத்தொகைகள்தான், (2) அவைகளில் மற்றவர்கள் தொகைகளை வட்டிக்குப் போட்டுவைக்க முன்வருவதில்லை. ஏனென்றால் அவைகளில் பணம் போட்டால் அதற்குத்தக்க ஆதாரம் ஒன்றுமில்லாமல் இருக்கிறது. மறுபடி தொகை வசூல்செய்யத் தொல்லையுண்டாக இடமிருக்கிறது. (3) இந்த நிதிகளிலிருந்து வேண்டும்போதெல்லாம் கடன் அகப்பட இடமில்லை. வேண்டும் அளவுக்கும் அவைகள் கடன் கொடுக்கவும் முடியாது. முதல் முதல் கடன் கேட்டவர்களுக்கு மட்டும் கடன் தொகை கிடைக்கிறது. மற்றவர்கள் வெகுநாள் காத்திருக்க வேண்டும். (4) வாயிதா நீடித்த காலத்துக்கு ஏற்படுத்த முடியாது. (5) மாதா மாதம் சந்தாத்தொகை செலுத்திக்கொண்டேயிருக்க வேண்டும் அப்படிச்செய்வது கிருஷி ஜீவனமுடையவர்களுக்குக் கூடாத காரியம். (6) ஜனங்களுடைய அநுகூலத்துக்காக இந்த நிதிகள் வேலைசெய்யவில்லை. வட்டி அதிகமாய் சம்பாதிப்பதற்கும் நிதியை மேற்பார்க்கும் டைரக்டர்களுக்கு அதிக வரும்படி கிடைக்கவேண்டும் என்றும் நோக்கத்துடனேயிம் அவைகள் வேலை செய்யும். இப்படியிருப்பதுடன் கவனமின்மையாலும் கண்டிப்புக் குறைவினாலும் சட்டதிட்டங்களின்படி சரியாய்க் காரிய நிர்வாகம் நடத்தப்படுவதில்லை. குறித்த காலத்தில் நிதியின் கணக்குகள் சரியாய்ப் பரிசோதித்துத் தனிக்கை செய்யப்படுவதில்லை.

இப்படிப்பட்ட பல காரணங்களால் இந்த நிதிகள் ஏழைக்கிருஷிகருக்கு மிகவும் உபயோகமுள்ளவைகளாக இல்லை. சர்க்காரிலிருந்து இந்த நிதிகளின் காரியாதிகள் எப்படி நடக்கின்றன என்பதைக் கவனிக்கக்கூடிய சட்டதிட்டங்களும் முன் ஏற்படவில்லை. இப்போது கூட்டுநாணயச் சங்கங்களை ஸ்தாபிக்கவும், அவைகளின் வேலையை அடிக்கடி மேற்பார்க்கவும் இவை முதலான பல காரியங்களைப்பற்றி இராஜாங்கத்தார் சட்டதிட்டங்களையுண்டாக்கியிருக்கிறார்கள். அப்படி ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களின் கணக்குகளை அப்போதப்போது தணிக்கை செய்து ரிப்போர்ட்டுகள் அனுப்ப வேண்டியதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் சில இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இனி ஏழைக்கிருஷிகர் கடன் என்னும் கடலை நீந்திக் கடந்து கரையேறி க்ஷேமப்படலாம். செட்டுடன் காலக்ஷேபம் நடத்தி வருஷாவருஷம் கொஞ்சம்மீத்துவைத்துக் காப்பாற்றிக் கொள்ளலாம்; பணச்செலருக்கும், துராசாரத்துக்கும் இடங்கொடுத்து இகபரமிரண்டுக்கும் ஏற்காததான மதுபானம் முதலான பல கெட்ட வழக்கங்களை அடியோடு தொலைப்பதற்கு மெம்பர்கள் பழக்கப்படலாம். கூட்டுத்தொழிலின் ஏதுவால் ஒவ்வொருவனும் கொள்ளும் பல பொருட்களுக்கு விலை குறைவாய் ஏற்படலாம் கூட்டுறவின் பயனால் கிருஷிகருக்குள் சகோதர பாவமும் பரஸ்பர சிநேகமும் ஒற்றுமையும் உண்டாகலாம். தங்கள் கிராமப்பொதுக் காரியங்களைக் கிருஷிகர் தாங்களே நடத்தி மேற்பார்த்துக்கொள்ளும் சக்தியவர்களுக்கு சில வருஷப் பழக்கத்தால் தானாகவே யுண்டாகும். ஒரு கிராமத்தின் விவசாய விர்த்திக்கு வேண்டிய தெரிந்தெடுத்த விதைபோ, நூதன எருவகைகளோ, உபயோகமுள்ள விவசாயக் கருவிகளோ எல்லாம் சில வருஷக்காலத்தில் கிருஷிகர் லேசாய்ப் பெறவும், அந்தக் கிராமத்தில் உள்ள சிறுவர் சிறுமிகளுக்குக் கல்விகற்பிக்கும் சாதனங்களை ஏற்படுத்தி, அவைகளை மேற்பார்க்கவும், இந்தக் கிராமத்திலுள்ள ஏரி குளம்

குட்டை முதலிய ஜலாதாரங்களை விர்த்தி செய்து பயிர்களின் சாகுபடியில் நிரந்தரமான பாதுகாப்பை ஸ்தாபிக்கவும், அந்தக் கிராமத்தின் சுகாதார விஷயங்களையும், தெருக்களின் துருஸ்து, விளக்குப்போடுதல் முதலான காரியங்களையும் அவர்களே நடத்திக்கொள்ளவும் கூடிய சக்தியும் அறிவும் புத்தி விசாலமும் ஊக்கமும் விடாமுயற்சியும் பரோபகார சிந்தையும் தேசாபிமானமும் அவர்களுக்கு நாளடைவில் உண்டாகும். மேலுரைத்தன விஷயங்களில் அப்போது அவர்களுக்கு அநுபவஞானம் உண்டானதாக எண்ணப்படும். ஆகையால் கிருஷிகரே! எல்லாக் கிராமங்களிலும் கூட்டு நாணயச் சங்கங்களை ஸ்தாபித்து ஏழைக்கிருஷிகருக்கு உதவி செய்யுங்கள்.

AGRICULTURE.

விவசாயம்.

AGRICULTURAL IMPROVEMENT.

விவசாய அபிவிர்த்தி.

நமது தேசத்தில் விவசாயம் என்ன ஸ்திதியிலிருக்கின்றதெனக் கவனிக்கும் ஒவ்வொருவருக்கும் பின்சொல்லும் விஷயங்கள் நன்றாய்த் தெரியும்.

(1) விவசாயத்தைப்பற்றிய அறிவும் ஆராய்ச்சியும் நமது விவசாயிகளிடத்தில் இல்லை.

(2) அவர்களுக்கு விவசாயத்தில் ஊக்கமும் உழைப்பும் விடாமுயற்சியும், சுறுசுறுப்பும் இல்லை.

(3) "உழுதவன் கணக்கைப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது" என்று சொன்னபடி அவர்கள் விவசாயத்தில் போட்டிருக்கும்முதல் என்ன? உழவு கூலி, எரு, வித்து, நடுவை, நீர்ப்பாய்ச்சல், களைபறி, அறுவடை முதலியகாரியங்களில் எவ்வளவு தொகை செலவாயிருக்கிறது? கிடைத்த மாசூலின் விலை யென்ன? சர்க்கார் கிஸ்தியும் செலவும் போக மீந்தது எவ்வளவு என்று எண்ணிப்பார்க்கும் வழக்கம் அவர்களுக் கில்லை. வியபார விஷயங்களிலோ வருஷாவருஷம் கிடைத்த லாபமோ நஷ்டமோ இவ்வளவென்று கணக்குப் பார்த்துக்கொள்ளுவார்கள். விவசாயத்தில் அப்படிச் செய்வதில்லை. விவசாயமும் ஒரு தொழில் முயற்சியாகையால் அதிலும் வரவுசெலவு லாபங்களைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆனால் நமது கிருஷிகரோ "எண்ணிச் செய்வது செட்டு; எண்ணாமற் செய்வது வேளாண்மை" என்று சொல்லுவார்கள். இது பழையகாலப் பைத்தியமே யல்லாமல் இக்காலத்துக்கு இசையாது ஏனென்றால் முன்காலத்தில் கிருஷிகருக்கு யாதொரு செலவில்லாமலே அபரிமிதமான நிலங்கள் கிடைத்தன. அவைகளில் தங்களுக்கு அப்போதப்போது எவ்வளவு அவசியமோ அம்மட்டும் சாகுபடி செய்துகொண்டு மீந்ததைப்பற்றி கவனிக்காமலிருந்தார்கள். சாகுபடிசெய்த நிலத்துக்குத்தான் தீர்வை. இப்போதோ ஆயிரமாயிரமாகக் கொட்டினாலும் அரைக்காணி நிலம் அகப்படுவது துர்லபமாயிருக்கிறது. அப்படி அகப்பட்டாலும் கல்லாங்குற்றும் பாரை புறம்போக்கு மாயிருக்கும். விசேஷ விர்த்தி செய்தாலல்லாமல் அவைகளைப் பயிரிடமுடியாது. விலைவாசிகள் அதிகரித்துவிட்டன மாசூல் தானியத்துக்கு அதிகவிலை கிடைத்தாலும், விவசாயக்கூலி முதலிய அதிக செலவுகளுக்கு அது சரிக்கட்டவில்லை. முப்பது வருஷத்துக்குமுன்னிருந்த ஜனத்தொகைக்கு இப்போது ஒன்றரை மடங்காயிருக்கிறது. சுமார் 50, 60 வருஷக்காலத்தில் ஜனசங்கியை இரட்டிக்கிறதெனச் சொல்லலாம். ஆகவே தற்காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் முன் செலவானதற்கு இரட்டிப்பு மடங்கு ஆகார தானியங்கள் அவசியம். இதை யெல்

லாம் பார்க்கும்போது விவசாயத்தை எண்ணிச் செய்யாமல் இருப்பது சரியல்ல. வியாபாரத்தைப் போலவே விவசாயத்தில் வரவு செலவு கணக்குப் பார்த்து லாபம் எவ்வளவு என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்போதுதான் கிருஷிகருக்குத் தம் முன்னோர்கள் செய்து வந்தபடியே இப்போதும் செய்வது சரியா? அவர்கள் இட்ட பயிர்களையே நாமும் சாகுபடிசெய்வது சரியா? வேறு முறைகளைக் கையாடவேண்டியது அவசியமா? என்பது நன்கு விளங்கும்.

(4) மழையளவு, காலநிலை விலைவாசி, சந்தைக்கடை, ரோட்டுபாதை, புகைவண்டிப் போக்குவரவு, தந்தித்தபால், நாகரீகஜீவனம், முதலான பலகாரியங்களில் தற்காலத்தில் உண்டாயிருக்கும் மாறுதல்களுக்குத் தக்கதாக நமது விவசாய மார்க்கங்களையும் பயிர்வகைகளையும் கருவி காரணங்களையும் மாற்றிக்கொள்ளவேண்டும் என்னும் யோசனை இன்னும் அநேகருக்கு உண்டாகவேயில்லை. முன்காலத்தில் "ஆடிப்பட்டம் தேடிவிதை" என்றபடி ஆடியிலே விதைப்புக்கேற்ற மழை பெய்தது. "கார்த்திகைப் பிறைகண்ட காராளா, உன் கைநாற்றை வீசி நீ கரையேறு" என்று சொல்லும்படி கார்த்திகைப் பிறைகண்டபின் நடுகைசெய்தால் நஷ்டமுண்டாகும் என்ற எண்ணம் நம் முன்னோருக்கிருந்தது. இப்போதோ காலமழைகள் சரியாய்ப் பெய்வதில்லை. ஒரு வருஷத்தில் அற்பசி கார்த்திகையில் மழைபெய்யாமல் மார்கழி மாதத்தில் கனமழை தொடர்ந்து பெய்கிறது. இந்த வித்தியாசங்களுக்குத் தக்கதாக நமது முறைகளை மாற்றிக்கொள்ளாவிட்டால் நஷ்டம் தீர்மானமாய் உண்டாகும். இப்படியே காலநிலையில் உண்டாயிருக்கும் காலபேத இயல்பை நாம் கவனிப்பதில்லை. மேலும் முன் ஏக்கர் ஒன்றுக்கு 4 வண்டிக்குக் குறையாத குளைதழை வாங்கி வைத்துக்கொண்டிருந்தோம். வண்டி யொன்றுக்கு விலை ரூ. 1½ அல்லது ரூ. 2 ஆக இருந்தது இப்போதோ ரூ. 6 கொடுத்தாலும் தழை அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. இப்படியே கூலிச்சம்பளமும் அதிகரித்துவிட்டது. அயல் தேசங்களுக்கு ஜனங்கள் குடியேறிப் போகிறார்கள் அதனால் நமக்கு விவசாய வேலையாட்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. முன்காலத்தில் விலை பொருட்களை விலை செய்வது மிகவும் வருத்தமாயிருந்தது. தற்காலத்தில விலை பொருட்களை விலை செய்வது மிகவும் வருத்தமாயிருந்தது. தற்காலத்தில் சந்தைகளும் கடைகளும் கிராமாந்தரங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அங்கங்கே என்னென்ன விளைபொருட்கள் அதிகமாய் விலையாகின்றனவோ அந்தப் பயிர்களை சாகுபடி செய்வது லாபகரமாயிருக்கும். அநேக பட்டணங்களுக்கும் பெரிய கிராமங்களுக்கும் சமீபத்திலிருக்கும் விவசாயிகள் காய்கறி பதார்த்தங்களைப் பயிரிடுவது தானியப்பயிரைவிட லாபம் தரத்தக்கது. சில ஊர்களில் கனிமரங்களையும் தோப்புகளையும் வைத்துண்டாக்குவது மிகவும் லாபகரமாயிருக்கும். சில ஊர்களுக்கருகில் விறகுக்காக மரங்களை வைத்து விருத்தி செய்வது உத்தமமாயிருக்கும். மேலும் முன் காலத்தில் ஓரூரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போக வண்டிப்பாதை கிடையாது. இப்போது சௌகரியமான பாட்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குத் தக்கதாக நமது பயிர்களை மாற்றிக்கொள்ளலாம். புகை வண்டிகளின் மூலமாயும் விலைபொருட்களை தொலைதூரங்களுக்கு அனுப்பக்கூடும். தந்தித் தபால இப்போது எல்லாவிடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்குள்ள விலைவாசிகள் அப்போதைப்போது அறிந்துகொள்ளும் சாதனம் அதனால் நமக்குண்டாயிருக்கிறது. அதற்குத் தக்கதாக நமது காரியங்களை நாம் மாற்றிக்கொள்ளாவிட்டால் நமக்குக் கிடைக்கும் லாபத்தை மற்றவர்

கள் அதிக சந்தோஷத்துடன் அநுபவிப்பார்கள். நடையுடை பாவனைகளிலும், தட்டுமுட்டு சாமான்களிலும், ஆகார விஷயங்களிலும், ஆசனம், படுக்கை, அரங்கு வீடு முதலிய பல காரியங்களிலும் நமது ஜனங்கள் தற்காலத்தில் ஆச்சரியகரமான மாறுதலடைந்திருக்கிறார்கள். அதற்குத் தக்கதாக விவசாய முறைகளையும் நாம மாற்றிக்கொள்ளவேண்டும். இவ்விதமாகக் காலபேத இயல்புக்குத் தக்க மாறுதல்களை அப்போதைக்கப்போது செய்துவந்தால் நலமாயிருக்கும்.

(5) நமது கிருஷிகருக்கு அவரவர்கள் சாகுபடி செய்யும் பயிர் விஷயங்களில் அதிகமான அறிவும் அநுபவமும் உண்டாயிருக்கிறதென்பது வாஸ்தவமே. உதாரணமாக நெல் சாகுபடி செய்துவரும் ஜனங்களுக்கு அந்தப் பயிர் விஷயமான பல காரியங்களும் நன்றாய்த் தெரியும். அதில் ஜாஸ்தியான மாசூல் உண்டாகும் வழிகளும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அந்த மாசூல் நெல்லை எந்தக்காலத்தில் எவ்விடங்களில் விலைசெய்தால் தங்களுக்கு அதிக லாபம் கிடைக்குமென்பது அவர்களுக்குத் தெரியாது. குறைந்த செலவில் விவசாய வேலைகளை நடத்தவும், அதிலிருந்து அதிகப் பயன் உண்டாக்கவும் அவர்கள் அறிவார்கள் ஆனால் அவ்வளவு வேலையும் உழைப்பும் கவனமும் வேறொரு பயிர்ச் சாகுபடியில் செலுத்தினால் எவ்வளவு லாபம் தங்களுக்குக் கிடைக்கும் என்பதை அறியார்கள். நெல்பயிரிடுபவன் நெல்லையே பயிரிடுவான்; புல் (கம்பு) பயிரிடுவோன் புல்லையே விதைப்பான்; கொள் பயிரிடுவோன் கொள்ளையே கையாடுவான்; கோதுமை பயிரிடுவோன் கோதுமையே விளைவிப்பான். இவர்களுக்கு அந்தந்தப் பயிரைத்தவிர வேறு பயிர்கள் இருக்கின்றனவென்னும் எண்ணங்கூடத் தோன்றுவதில்லை. இப்போது என்ன விலைபொருட்களுக்கு அதிகமான விலை கிடைக்கிறது என்பதை விசாரித்து அறிந்து அதற்குத்தக்க பயிரை விளைவிப்போர் மிகவும் குறைவே.

(6) இதுவன்றி நமது விவசாய மார்க்கங்களும் முறைகளும் பண்டைய வழக்கங்களாகவே இருக்கின்றன. தற்கால நாகரீக மார்க்கங்களுக்குப் பொருந்தாதனவாயும், அவைகளைச் செய்வோருக்கு அலுப்பும் ஆயாசமும் உண்டாக்கக்கூடியனவாயும், மனக்கிளர்ச்சியும், உற்சாகமும், சந்தோஷமும் ஒழிந்துபோகக்கூடியதாயும் இருக்கின்றன. அதனால் விவசாயத் தொழில் முக்கியமாகத் தாழ்ந்த ஜாதியரால் நடத்தப்பட்டுவருகிறது. கிருஷிகரின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப்போய் எழுத வாசிக்க எண்ணக் கற்றுக்கொண்டவுடனேயே தங்கள் பெற்றோர்கள் நடத்திவரும் சிறந்த தொழிலை தாழ்ந்த ஜீவனமாக அவமதிக்கவும், அதினின்று விலகி யோடிப் பட்டணங்களுக்குப்போய்ப் பல சேவகாவிர்த்திகள் செய்து பிழைக்கவும் காரணமாயிருக்கிறது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்று நாயனர் எழுதிய உண்மைவாக்கின் பயனை ஒருவர் உணராமற்போகும்படியாக உழவுத்தொழில் முறைகள் அத்துணை சர்வ சாதாரணமாகவும், தேக உழைப்பேயன்றி மனோல்லாசமும் சந்தோஷமும் தருவனவாயில்லாமலும் ஏற்பட்டிருக்கின்றன. இதனாலேயே விவசாய முறைகள் விர்த்தியடையா

மல் இருந்த இடத்திலேயே இருக்க நேரிடுகிறது. விவசாய முறைகள் கேவலஸ்திதியிலிருப்பதால் கௌரவத்தை விரும்பும் கல்விமான்கள் அவைகளில் தலையிடாமல் கைவிடவும், அவர்கள் கைவிட்டால் அம்முறைகள் அதிகக் கேவலஸ்திதியை யடையவும் இவ்விதமாக இவ்விரண்டு காரணங்களும் ஒன்றுக்கொன்று உபகாரணமாய் முடிவில் விவசாய அபிவிர்த்தியைத் தடைப்படுத்திக்கொண்டிருக்கின்றன. கடையில் கணக்கெழுதிக் காலங்கழிப்பதும், நாள் தவறாமல் தபால் மூட்டையைத் தலையில் சுமந்துகொண்டு ஓடிச்சென்று மணிதப்பாமல் சேர்ப்பிப்பதும், தாலுகா கச்சேரிகளில் கட்டளை சம்மன்கள் நிறைவேற்றவும் எஜமான்களின் வீடுகளில் நடக்கவேண்டிய சகலவேலைகளையும் செய்வதும், வேஷ்டி தப்புவதும் அவர்களுக்குக் குடை பிடித்துக்கொண்டு தொண்டுழியஞ் செய்வதும் இவை முதலான எண்ணிறந்த தொழில்களில் அமர்ந்து காலத்தைக் கழிப்பது கௌரவம் என்றும் உழுதுண்டு வாழ்வது தாழ்வென்றும் நம்மவர்கள் நினைப்பது நமது துர்ப்பாக்கியமென்றே சொல்லவேண்டும்.

அப்படி அவர்கள் நினைப்பதற்கு முக்கிய காரணமாயிருப்பது விவசாயத் தொழிலின் தற்கால நிலைமை. அத்தொழிலை சிரமமில்லாமலும் மனக்கிளர்ச்சியோடும் சந்தோஷத்தோடும் நடத்தக்கூடியவிதமாய்ச் சீர்ப்படுத்துவது அத்தியாவசியம். கௌரவ ஜீவனம் விரும்பும் விவேகிகள் விவசாயத்தை அவமதித்து அருவருக்காமல் ஆசையுடன் அதைக் கைக்கொள்ளும்படியும், தற்காலத்தில் அதிற் கிடைக்கும் இலாபத்தைப்பார்க்கிலும் மூன்று மடங்கு அதிக லாபத்தைத் தரும்படியாகவும் விவசாயத்தை விர்த்திசெய்யக்கூடும். கடையில் கணக்கெழுதுவது முதலான பலவேறு தொழில்களைப்பார்க்கிலும் விவசாயத்தில் அதிகப்பணம் கிடைக்குமானால் கிருஷிகர் விவசாயத்தைக் கைவிட்டு மற்றத் தொழில்களைக் கைபாடக் காரணமில்லை. மேலும் அந்தத் தொழிலில் ஏற்படும் தேகச்சிரமத்தைக் குறைத்தும் மனக்கிளர்ச்சியையும் சந்தோஷத்தையும் அதிகப்படுத்தவும் கூடிய சகல மாறுதல்களையும் நாம் அப்போதப்போது நடத்தவேண்டும். கிருஷிகன்.